
பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

உங்கள் மனம் விரும்பும்
வேலைவாய்ப்பை
உடன் பெற்றுக்கொள்ள
WINSTAR
JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstarjaffna.com
Fb : winstarjob bank
021 320 2789


விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 17, புதன்கிழமை 31.05.2017 கதிர் 206




# கிளிநொச்சியில் மக்கள் ஏ-9 வீதியில் குந்துமறியல்



## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் 100 ஆவது நாள் நடவடிக்கை

கிளிநொச்சி, மே 31

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலையை அறியத் தருமாறு கோரி அவர்களின் உறவினர்கள் பலத்த பொலிஸ் கெடுபிடிகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் நேற்றுக் கிளிநொச்சியில் பெரும் எண்ணிக்கையில் ஒன்று திரண்டு 'ஏ9' வீதியை மறித்து குந்துமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பக்கம் 03 »

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம்:

## அரசை மட்டும் குறை கூறுவதா? விசனம் தெரிவிக்கின்றார் ஆளுநர்

யாழ்ப்பாணம், மே 31

'காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தனியே அரசாங்கத்தால் மட்டும் காணாமல் ஆக்கப்படவில்லை. புலிகள் உள்ளிட்ட ஆயுதக் குழுக்களாலும் இந்திய அமைதிப் படை போன்றவற்றாலும் காணா

பக்கம் 18 »

## விநாயகமூர்த்தியின் பூதவுடல் நேற்று தீயுடன் சங்கமம்



கொழும்பு, மே 31

கடந்த ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் காலமான யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் இறு

பக்கம் 18 »

## நீதிமன்றில் ஞானசாரர் இன்று நேரில் பிரசன்னம்?



நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அழைப்பாணை விடுவிக்கப்பட்டுள்ள பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் வணக்கலகொட அத்த ஞான சாரதேரர் இன்று அந்த வழக்குத் தவணையின் போது அந்த

பக்கம் 18 »

## யாழ்.ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் அவசர கோலத்தில் முடிவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 31

2017 ஆம் ஆண்டுக்கான யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களான

பக்கம் 13 »

## இரு மாத காலத்தில் மயிலிட்டி விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 31

வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் இருக்கின்ற மயிலிட்டிப் பிரதேசம் அடுத்த இரண்டு மாத காலத்திற்குள் விடுவிக்கப்படவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ். மாவட்ட ஒருங்கி

பக்கம் 18 »


## நாவற்குழியில் தாது கோபுரம் அமைப்பதற்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம், மே 31

யாழ். நாவற்குழி சிங்கள குடியேற்றப் பகுதியில் தாது கோபுரம் அமைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு யாழ். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 13 »

அலெப்ப அருணாசலம்



1956 இல் காலிமுகத்திலை தொடங்கின குந்துமறியல் இன்னும் தொடருது....!

## அனர்த்த உயிரிழப்பு 200 ஐ எட்டியது 99 பேர் மாயம்; 6 லட்சம் பேர் பாதிப்பு

கொழும்பு, மே 31

தென்னிலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 200ஐ எட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன், 99 பேர் காணாமற் போயுள்ளனர். 112 பேர் காயமடைந்தும், 83 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் இடம்

பக்கம் 18 »

## இராணுவத்தினரின் நிகழ்வுகளுக்கு மாணவர்கள் உள்ளீர்க்கத் தடை

யாழ்ப்பாணம், மே 31

இராணுவத்தின் களியாட்டங்களுக்கு பாடசாலை மாணவர்களை உள்ளீர்ப்பதற்கு முற்றும் முழுதாகத் தடைவிதிக்க வேண்டும் என்று நேற்று நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பக்கம் 18 »

## அமைச்சர்களுக்கு வாகனங்கள் கொள்வனவு செய்வது நிறுத்தம்

கொழும்பு, மே 31

பெருந்தொகைப் பணத்தில் அமைச்சர்களுக்காக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உடனடியாக இடைநிறுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நடைபெற்ற அமைச்சர

பக்கம் 18 »

## சீனா, பாக்., இந்தியாவிலிருந்து கப்பல்களில் நிவாரணங்கள்

### இஸ்ரேல், ஆஸி, சிங்கப்பூரும் உதவுகின்றன

வெள்ளம், நிலச்சரிவு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு சீனா, பாகிஸ்தான், இந்தியாவிலிருந்து கப்பல்களில் நிவாரணப்பொருள்கள் வந்த வண்ணம் உள்ளன.

இலங்கைக்கு 22 லட்சம் அமெரிக்க டொலர் (சுமார் 33 கோடி ரூபா)

பக்கம் 18 »

## பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கு மேலும் காணிகளை சுவீகரிக்க முடியாது

யாழ்ப்பாணம், மே 31

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பிற்காக மேலதிகமாகப் பொதுமக்களுடைய காணிகளைச் சுவீகரிப்பதற்கு வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்தை முற்றுமுழுதாக நிராகரித்து நேற்றைய யாழ். மாவட்ட ஒருங்கி

பக்கம் 13 »

காலைக்கதிர்



# இலங்கையின் தற்போதைய நிலைமையை ஏழு சர்வதேச தேடல் குழுக்கள் ஆராய்வு!

## கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகம் தெரிவிப்பு

கொழும்பு, மே 31

இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஏழு சர்வதேச தேடல்கள் மற்றும் மீட்புக் குழுக்கள் கண்காணித்து வருகின்றன என்று கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு இந்த அமைப்புகள் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

மனிதாபிமான வெளிநாட்டுக் குழு, இலங்கையில் ஏற்பட்டுள்ள அனர்த்தத்தில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கைக்கு ஆதரவளிக்கவுள்ளது. அத்துடன் சுகாதார கருவிகள், நீர் சுத்திகரிப்பு மாத்திரைகள் ஆகிய வற்றை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

தொழில்நுட்ப ஆதரவு, தகவல் முகாமைத்துவம், பகுப்பாய்வு மற்றும் மருத்துவ அணிகளை ஒருங்கிணைத்தல் ஆகிய உதவிகளையும் குறித்த குழு வழங்கவுள்ளது.

'தேசிய் அவசர நிவாரண சேவைகள் மையத்தின் உடனடி தேவைகளாக குடிதண்ணீர் மற்றும் உணவுப் பொருள்கள் பற்றாக்குறையாக உள்ளதாக ஐ.நா. அலுவலகம் தெரிவித்துள்ளது.



வெள்ளத்தால் ஏற்பட்ட சேதம் பற்றிய பகுப்பாய்வுக்குத்துணைபுரியும்செயற்கைக்கோள் படத்தைப் பெற சர்வதேச விண்வெளிமையத்தை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நாடவுள்ளது.

முகில்கள் காரணமாக இந்த புகைப்படங்களை பெற்றுக் கொள்வதற்கு கடினமாக உள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

காலி, அம்பாந்தோட்டை, கேகாலை, களுத்துறை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 33 பிரதேச செயலகங்கள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் இடம்பெயர்வு அறிவிப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புகைத்தல் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி

தென்மராட்சி, மே 31

சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை விழிப்புணர்வுப் பேரணியும் உயர்தர மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடத்தப்படவுள்ளன.

நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்தில் கூடும் அலுவலர்களும், பொது மக்களும் நடைபவனியாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி வரை பேரணியாகச் சென்று அங்கு உயர்தர வகுப்பு மாணவர்களுக்கானவிழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்படும்.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாகக் கிராம மக்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளன. (ச)

## அம்புலன்ஸ் விபத்தில் ஒருவர் காயம்; சாரதி கைது!

வவுனியா மூன்று முறிப்பு பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற அம்புலன்ஸ் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனை அடுத்து அம்புலன்ஸ் சாரதி கைது செய்யப் பட்டுள்ளார்.

வவுனியாவிலிருந்து மூன்று முறிப்புப் பகுதி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியில் திரும்ப முற்பட்ட சமயத்தில் ஏ-9 வீதியூடாக வவுனியா நோக்கி பயணித்த அம்புலன்ஸ் மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளின்சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-100)

## பாஷையூர் அந்தோனியார் திருவிழா நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 31

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா நாளை முதலாம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

செபமாலையும், கொடியேற்றமும் குழந்தை யேசு சுருபத்தடியில் இடம்பெறும்.

மறுநாள் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு வரவேற்பு அந்தோனியார் சுருபத்தடியில் வழிபாடும், சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கடல் அந்தோனியார் சுருபத்தடியில் வழிபாடும் தொடர்ந்து நவநாள் வழிபாடுகளும் இடம்பெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி தேர்ப்பவனியுடன் திருவிழா நிறைவுபெறும். (ச)

## அனர்த்தப் பகுதிகளில் கடமைக்கு விசேட சுகாதார பிரிவு நியமனம்

கொழும்பு, மே 31

இயற்கை அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சுகாதார நிவாரண சேவை மருந்து மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவதற்காக சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன விசேட சுகாதாரப் பிரிவொன்றை அமைத்துள்ளார்.

இடர் நிவாரணப் பணிகளுடன் தொடர்புபட்டதாகச் செயற்படுவதற்காக இந்த விசேட பிரிவொன்றை அமைத்துள்ள சுகாதார அமைச்சர் அந்தப் பிரிவின்தலைமை அதிகாரியாக முன்னாள் சுகாதார அமைச்சின் செயலாளர் அத்துல காந்தலியனகேயை நியமித்துள்ளார்.

இந்த விசேட பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பில் விசேட சந்திப்பு ஒன்று நேற்றுக் காலை சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

இந்த பிரிவின் தலைமை அதிகாரி அத்துல காந்தலியனகேயின் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் உலகசுகாதார அமைப்பின் பிரதிநிதிகள் மேலதிக செயலாளர்கள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள், முப்படை அதிகாரிகள் மற்றும் சுகாதார அமைச்சின் பலரும் கலந்துகொண்டனர்.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 8 மாவட்டங்களுக்குமான பிரதிப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாத்தறை மாவட்டத்துக்காக வைத்தியர் சரத் அமுனுகமவும், காலி மாவட்டத்துக்காக லக்ஷ்மி சோமதுங்கவும், இரத்தினபுரி மாவட்டத்துக்கு சுனில்டி அல்விஸும் களுத்துறை மாவட்டத்துக்கு அமல் அரசடி சில் வாவும் நியமிக்கப்பட்டுள்ளனர். கேகாலை, கம்பஹா, அம்பாந்தோட்டை, கொழும்பு மாவட்டங்களின் இணைப்பாளராக ஹேமந்த ஹேரத்தும் நியமிக்கப்பட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## புகையிலை பொருள்களுடன் வெளிநாட்டுப் பிரஜை முல்லையில்!

தடைசெய்யப்பட்ட புகையிலை பொருள்களுடன் முல்லைத்தீவில் வெளிநாட்டு பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர், ஒட்டுசுட்டான் சிவநகர் பகுதியில் வைத்து புகைப் பொருள்களை விற்பனை செய்த நிலையிலேயே நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்த நபர் ஒருவர் சட்டவிரோதமாக புகையிலை பொருள்கள் விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளார் என்று ஒட்டுசுட்டான் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

தகவல் அறிந்த பொலிஸார் சிவில் உடையில் நேற்று அங்கு சென்று சந்தேகநபரிடம் புகைப்பொருள்களை கொள்வனவு செய்துள்ளனர்.

இதன்போது, அந்த நபரை கைது செய்து, அவரிடம் 24 சட்டவிரோத சிகரெட்டுகளும் மீட்கப்பட்டுள்ளன என்று போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

கிளிநொச்சியில் காணாமற்போனவர்களின் உறவினர்களால் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப் பட்டுள்ளது. இந்தப் போராட்டம் நேற்றுடன் 100 ஆவது நாளை எட்டிய நிலையில் தமது போராட்டம் தொடர்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றை விநியோகித்துள்ளனர். (ஐ-70)



## ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் ஒருமாதக் கொடுப்பனவை நிவாரணமாக வழங்க முடிவு!

கொழும்பு, மே 31

ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாணசபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத சம்பளத்தை அனர்த்த நிவாரணப் பணிகளுக்கு அன்பளிப்புச் செய்ய அக்கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கல்வி அமைச்சரும், ஐ.தே.கவின் துணை பொதுச் செயலாளருமான அகிலவிராஜ் காரியவசம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு எடுத்துள்ள தீர்மானத்துக்கு அமைய கட்சியின் அனைத்து மாகாணசபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத சம்பளம் அனர்த்த நிவாரணப் பணிகளுக்கான நன்கொடையாக வழங்கப்படவுள்ளது.

அவ்வாறு சேகரிக்கப்படும் பணத்தைக் கொண்டு அனர்த்தங்களுக்கு உள்ளான பிரதேச மாணவர்களின் கற்றல் உபகரணங்கள் உள்ளிட்ட கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## மதிய உணவைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கினர் வெலிக்கடைச் சிறைக்கைதிகள்!

கொழும்பு, மே 31

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் மதிய உணவை நேற்று பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கினர். நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கையில் பல்வேறு தரப்பினரும் தாமாக முன்வந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இதன் ஒரு கட்டமாக வெலிக்கடை சிறைச்சாலை தடுப்புக் கைதிகளும் தங்களுடைய ஒரு நேர உணவை பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்குவதற்கு தீர்மானித்தனர்.

சுமார் ஆறாயிரம் உணவுப் பொதிகள் வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து வழங்கப்பட்டுள்ளன. இந்த உணவுப் பொதிகளை தயாரிப்பதில் தடுப்புக் கைதிகள் மட்டுமன்றி சிறைச்சாலை நிர்வாகமும் இணைந்து செயற்பட்டது.

# நாவற்குழி விகாரைக்கு எதிராக எவரும் நீதிமன்றம் செல்லமுடியும்

## சட்டம் அனைவருக்கும் ஒன்றே என்கிறார் வடக்கு ஆளுநர்

நாவற்குழியில் பௌத்த தாதுகோபம் நிர்மாணிப்பதற்கு பிரதேச சபையின் அனுமதி பெறப்படவில்லையாயின் அதை எதிர்த்து நீதிமன்றம் செல்ல முடியும் என வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட்கூரே கூறியுள்ளார்.

இலங்கையில் சகல மக்களுக்கும் சட்டம் ஒன்றே. யாழ்ப்பாணம் இலங்கைக்கு வெளியே இல்லை. இலங்கைக்குள்ளேயே உள்ளது எனவும் தெரிவித்தார்.

தெற்கில் யாரும் விரும்பியபடி விகாரைகளையோ கோவில்களையோ பள்ளிவாசல்களையோ கட்ட முடியும். அங்கே எந்தத் தடைகளும் இல்லை எனவும் கூறினார்.

இதேவேளை தாதுகோபம் நிர்மாணிப்பதற்கு அனுமதி பெற வேண்டுமா என்பது தொடர்பாக தான் ஆராய வேண்டும். -எனவும் வடக்கு ஆளுநர் மேலும் தெரிவித்தார். ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அனர்த்தத்திற்கு வடக்கு மக்களும் உதவிகளை வழங்குவதன் மூலம் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த முடியும் எனவும் அவர் கூறினார்.

சுனாமியின்போது இனம், மதம், சாதி பாராமல் பணியாற்றியதைப் போல இப்போதும் பணியாற்றுவது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார். (ம)

# கனகராயன்குளத்தில் விபத்து; ஒருவர் தலை சிதறிப் பலி

## மற்றொருவர் படுகாயம்

வவுனியா, மே 31

வவுனியா-கனகராயன்குளத்தில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் ஹையஸ் வாகனம் மோதியதில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

முள்ளியவளையைச் சேர்ந்த சி.கருணேஸ்வரன் (வயது-55) என்பவரே பலியானவராவார்.

கனகராயன்குளம் ஏ-9 வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தவர் மீது பின்னால் வந்த மோட்டார்சைக்கிள் மோதியதால் அவர் நிலை குலைந்து பிரதான வீதியில் விழுந்தார். இதன்போது வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வேகமாகச் சென்ற ஹையஸ் வாகனம் அவருக்கு மேலாக ஏறிச் சென்றது.

இதனால் அந்த நபரின் தலைசிதறி சம்பவ இடத்திலேயே பலியானார். இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-100)

## கிளிநொச்சியில்...

பொலிஸார் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டு, தண்ணீர் பீய்ச்சி அடித்துக் கூட்டத்தைக் கலைக்கும் வாகனங்கள், கண்ணீர்ப் புகைக் குண்டுகள் சகிதம் அவர்கள் தயாராக இருந்தபோதும் மக்கள் மசியாமல் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சியில் காணாமற்போனோரின் உறவினர்களால் தொடங்கப்பட்ட போராட்டத்தின் நூறாவது நாளான நேற்று அவர்களாலேயே இந்தப் போராட்டம் ஒருங்கிணைக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில், அவர்களுக்கு ஆதரவாக ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். மிகவும் உணர்வுபூர்வமாக அந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய போராட்டத்தில் காணாமற்போனோரின் உறவினர்கள் கண்ணீரும் கம்பலையுமாகக் காணப்பட்டனர். தமது உறவுகளின் விடுதலைக்கு உதவுங்கள் என அவர்கள் அனைவரிடமும் உருக்கமாகக் கோரிக்கை விடுத்தனர்.

எனினும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் பிரதிநிதிகளை இரண்டு வாரங்களுக்குள் ஜனாதிபதி சந்தித்துக் கலந்துரையாடுவார் என வடக்கு ஆளுநர் சார்பில் வழங்கப்பட்ட உறுதிமொழியை அடுத்து போராட்டம் மாலை 5 மணியளவில் கைவிடப்பட்டது.

### போராட்டம் ஆரம்பம்

யுத்தத்தைக் காரணம் காட்டி படையினராலும் துணை ஆயுதக் குழுக்களாலும் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோரின் உறவினர்களும் இறுதி யுத்தத்தின்போது படையினரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் காணாமற்போனோரின் உறவினர்களும் இணைந்து கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக அரசியல்வாதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புக்கள் எனப் பல தரப்பினரும் குரல் கொடுத்தனர். அந்தப் போராட்டத்தின் வடிவங்கள் அவ்வப்போது மாற்றப்பட்டன.

தமிழ்ப் புதுவருடத்தை அவர்கள் கறுப்பு தினமாக அனுஷ்டித்தனர். மே தினத்தையும் துக்க தினமாகவே கடைப்பிடித்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் அனைவரும் ஒருகட்டத்தில் அழுது, குழறி ஒப்பாரிப் போராட்டத்தையும் நடத்தியிருந்தனர்.

இந்தப் போராட்டங்கள் எவற்றுக்குமே நல்லாட்சி அரசு செவிசாய்க்கவில்லை. தமிழ் - சிங்கள அரசியல்வாதிகளாலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியவில்லை. இதனால் அவர்களின் போராட்டம் நேற்றுடன் நூறாவது நாளை எட்டியது.

நூறாவது நாளில், வடக்கு - கிழக்கில் காணாமற்போனோரின் உறவினர்கள் இணைந்து பலம் பொருந்திய கவனவீர்ப்புப் போராட்டமாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படியே நேற்றைய போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்டது.

நேற்றுக் காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் ஒன்றுகூடிய ஆயிரக்கணக்கான மக்கள் ஆலயத்தில் விசேட பூசை வழிபாட்டில் ஈடுபட்டனர். தொடர்ந்து ஏ-9 நெடுஞ்சாலையில் அமர்ந்திருந்து குந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் காணாமற்போன தமது உறவினர்களின் படங்களைத் தாங்கியவாறு கண்ணீரும் கம்பலையுமாகக் காணப்பட்டனர். தமது உறவினர்களை விடுவிக்க வேண்டியது அரசின் கடமை என்பதை இடித்துரைக்கும் வகையிலான வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளையும் பதாகைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

ஆனால், இந்தப் போராட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்ட கிளிநொச்சிப் பொலிஸார் அதற்காக நீதிமன்றத் தடை உத்தரவு ஒன்றைப் பெறுவதற்கு முயன்றனர். ஆனால், ஒன்றுகூடுவதற்கும் ஆர்ப்பாட்டம் செய்வதற்கும் அரசமைப்பில் மக்களுக்கு உள்ள உரிமையை மதித்த நீதிமன்று போராட்டத்திற்குத் தடை விதிக்க மறுப்புத் தெரிவித்தது.

எனினும், பொதுமக்களின் நலனிற்கும் பொது ஒழுங்கிற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் ஆர்ப்பாட்டத்தை நடத்த பொதுமக்களை நீதிமன்று அறிவுறுத்தியிருந்தது.

போராட்டம் ஆரம்பித்த பின்னர் மேலும் மேலும் மக்கள் குவியத் தொடங்கியமையால் பொலிஸாரும் அதிக எண்ணிக்கையில் குவிக்கப்பட்டனர். கலகம் அடக்கும் பொலிஸாரும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டனர். வீதித் தடைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. கிளிநொச்சி மாவட்டச் செயலகச் சுற்றாடலிலும் அதிக எண்ணிக்கையான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக, ஏ-9 நெடுஞ்சாலையின் பிரதான வீதியில் மக்கள் குழுமி குந்தியிருந்து போராட்டத்தில் ஈடுபட்டமையால் அவ்வீதியூடான போக்குவரத்துக்கள் முற்றாகத் தடைப்பட்டன. எனினும், அம்புலன்ஸ்கள் மட்டும் போக்குவரத்துச் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கு மகஜர் ஒன்றை வழங்கவிருக்கின்றனர் என அறிவித்தனர். இதையடுத்து கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சத்தியசீலன் கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலடிக்குச் சென்று மகஜரைப் பெற்றுக் கொண்டார்.

அந்த மகஜரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெயர் பட்டியல்களை உடனடியாக வெளியிடவேண்டும், இரகசிய தடுப்பு முகாமில் தடுத்து வைத்திருப்பவர்களின் பெயர் விவரங்களை வெளியிடுவதுடன் அவர்களை சென்று பார்வையிடுவதற்கும் அனுமதிக்கவேண்டும், எமது இந்தக் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து அரசாங்கமும், சர்வதேசமும் நாம் இறப்பதற்கு முன் சில நாள்களாவது எமது உறவுகளுடன் வாழ வழி செய்யவேண்டும், இச்சந்தர்ப்பம் தவறவிடாவிட்டால் எமது போராட்டத்தை அடுத்து கட்டத்திற்கு நகர்த்துவது தவிர்க்க முடியாமல் போகும். - என்று அவர்கள் தெரிவித்திருந்தனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட மேலதிக அரசாங்க அதிபர் அந்த மகஜரை உடனடியாகவே ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்புவதாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால், போராட்டத்தில் ஈடுபட்ட காணாமற்போனோரின் உறவினர்களோ ஜனாதிபதி உறுதிமொழி தந்தால் மட்டுமே போராட்டத்தைக் கைவிடுவர் என உறுதியாகத் தெரிவித்தனர். இதனால் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஜனாதிபதியைத் தொடர்புகொள்ள முயன்ற போதிலும் அவர் அவசர கூட்டம் ஒன்றில் இருந்தமையால் அது சாத்தியப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் பிரதமர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளப்பட்டது. காணாமற்போனோரின் பிரதிநிதிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 7 ஆம் திகதி பிரதமரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டது. எனினும், பிரதமரைச் சந்திக்க மறுப்புத் தெரிவித்த அவர்கள் ஜனாதிபதியைச் சந்திக்க ஏற்பாடு செய்து தருமாறு கேட்டனர்.

இதனிடையே, காணாமற்போனோர் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனின் உறுதிமொழியையாவது பெற்றுத் தருமாறு போராட்டத்தில் ஈடுபட்ட காணாமற்போனோரின் உறவினர்களால் கோரப்பட்டது.

இதனையடுத்து போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அழைப்பை ஏற்படுத்தி உரையாடியிருந்தார்.

அவர், காணாமற்போனோர் பிரச்சினைகள் மற்றும் கிளிநொச்சியில் இடம்பெறும் போராட்டம் தொடர்பாக நாளை (இன்று) ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவார் எனவும் அதனையடுத்து காணாமற்போனோரின் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்வார் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு தெரிவியுங்கள் என சிறிதரன் எம்.பியிடம் கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே, காணாமற்போனோரின் உறவினர்கள் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தால் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எஸ்.சத்தியசீலன் போராட்டக்காரரிடம் தெரிவித்தார்.

''காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் ஆராய்வதற்காக இரண்டு வாரங்கள் அவகாசம் தேவையாகவுள்ளது. அத்துடன் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் ஜனாதிபதியை சந்தித்து தமது கோரிக்கைகள் தொடர்பில் தெரிவிப்பதற்கான சந்திப்பும் ஏற்பாடு செய்யப்படும்" - என வடக்கு ஆளுநர் சார்பில் தமக்கு அனுப்பி வைக்கப்பட்ட மின் அஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த உறுதிமொழியை அடுத்து மேற்படி போராட்டம் கைவிடப்பட்டது.

நேற்றைய இந்தப் போராட்டத்தில் வடக்கு, கிழக்கில் காணாமற்போனோரின் உறவினர்கள், சட்டத்தரணிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, சி.சிறிதரன், மூத்த அரசியல்வாதியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், வினோ நோகராதலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், மாவட்ட சிவில் அமைப்புக்களைச் சேர்ந்தோர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு ஆதரவு வழங்கினர். (ம-70,8)

## காலியில் துப்பாக்கிச் சூடு; இளைஞர் ஒருவர் மரணம்

காலி அஹீன்கல்லைப் பிரதேசத்தில் நேற்றிரவு 6.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இனந்தெரியாத நபர்களே இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றனர் எனக் கூறப்படுகின்றது.

அஹீன்கல்லை, மாகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார். அவர் தனது நண்பர் ஒருவரைச் சந்திப்பதற்காகச் சென்றிருந்த இடத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் படுகாயமடைந்த அவர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## நூல் வெளியீடு



“1981 மே 31 - ஜூன் 1 யாழ்ப்பாணத்தில் நடந்தவை - அதன் தொடர்ச்சி” என்ற தங்க முகுந்தனின் நூல் வெளியீடு இன்று மாலை 5.30 மணியளவில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நடைபெறுகிறது. (உ)

## குருநகர்ப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த குருநகர் -II பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ஏ.ஆர். வி.) போடப்படும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதன்படி, நாளை வியாழக்கிழமை :

★ காலை 9 மணி முதல் 11 மணி வரை - புதிய பூங்கா வீதி.

★ முற்பகல் 11 மணி முதல் ஒரு மணிவரை - புதிய வீடமைப்புத் திட்ட வீதி.

★ பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணிவரை - தொடர்மாடி குடியிருப்பு.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை:-

★ காலை 9 மணி முதல் 11 மணிவரை-குருநகர் பொலிஸ் நிலையத்துக்கு அருகில்.

★ முற்பகல் 11 மணி முதல் ஒரு மணிவரை - திருநகர் மாணவர் படிப்பகம்.

★ பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணிவரை - பழைய பூங்கா வீதி சிறுவர் நீதிமன்றப் பகுதி. (இ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மனித உரிமைவாதி விநாயகமூர்த்தி

யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி நம்மிடம் இருந்து பிரிந்து விடைபெற்று விட்டார்.

யாழ். மாவட்டத்திலிருந்து 2000, 2001, 2010 ஆகிய மூன்று பொதுத் தேர்தல்களில் நாடாளுமன்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டவர் அவர்.

2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மட்டும் அவர் விரும்பி ஏற்காத வவுனியா மாவட்டத்தில் நிறுத்தப்பட்டமையால், சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் நாடாளுமன்றுக்குத் தெரிவாகும் வாய்ப்பை இழந்தவர்.

எப்போதுமே மக்களால் மதிக்கப்படும் தலைவராக விளங்கியவர் விநாயகமூர்த்தி.

தமது இளவயது முதல் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் தலைமை மீது நீங்கா பற்றும் பெரும் மதிப்பும் கொண்டிருந்த விநாயகமூர்த்தி, அதனால் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடன் தன்னைப் பிணைத்துக் கொண்டவர். ஜீ.ஜீ.பொன்னம்பலத்தைத் தொடர்ந்து அவரின் மகன் குமார் பொன்னம்பலத்துடன் மிக நெருங்கிய - அந்நியோன்னியமான - அரசியல் சகாவாக விளங்கினார்.

2000 ஆம் ஆண்டு குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்டமையை அடுத்து அக்கட்சியின் தலைவரானார்.

ஆனால், பின்னர் 2010 இல் - தமிழீழ விடுதலைப் புலிகளின் அழிவுக்குப் பின்னர், அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐக்கியம் கருதி, தமது கட்சித் தலைமைப் பதவியையும் துச்சமென மதித்து, தூக்கி எறிந்தவர். அந்தக் கட்சியின் தலைமைப் பொறுப்பை இராஜினாமாச் செய்துவிட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தூணாக விளங்கியவர்.

அவரின் அரசியல் பாதை சர்ச்சைக்குரியதாக இருந்தது என்பது உண்மையே. நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை உறுதி செய்வதற்காகத் தாம் காலம் காலமாக விசுவாசமாக இருந்த கட்சியைத் தூக்கி எறிந்து விட்டு, கூட்டமைப்பு வேட்பாளர் நியமனத்தை ஏற்றுக்கொண்டார் என அவர் மோசமாக விமர்சிக்கப்பட்டதும் உண்டு.

ஆனால், ஒரு மனித உரிமைகள் சட்டவாதி என்ற நிலையில் அவரின் சேவை - பணி - அப்பழுக்கற்றது.

சிங்களச் சிறைகளின் வெங்கொடுமையை அனுபவித்த பல நூற்றுக்கணக்கான தமிழ்க் கைதிகள் ஒவ்வொருவரினதும் உள்ளங்கள் இந்த உயர்ந்த மனிதனின் அருமை, பெருமை பேசும்; அந்த சட்டவாதியின் மறைவுக்காக மனம் உருகி அழும்.

நேற்று அவருக்கான இரங்கலுரையில் சிரேஷ்ட சட்டத்தரணி என். ஶ்ரீகாந்தா சுட்டிக்காட்டிய ஒரு விடயம் ஈண்டு குறிப்பிட வேண்டியது.

1978 - 1979 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டு, தமிழ் இளைஞர்கள் மீது ஏவி விடப்பட்டது. பல நூறு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன், தேவன், டக்ளஸ் தேவா னந்தா, வரதராஜப் பெருமாள் என்று போராளிகள் தொடங்கி அரசியல்வாதியான அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் வேல்முருகு வரை, பலர் மீது வழக்குகள் தொடுக்கப் பட்டன. பலர் தடுப்புக் காவலில் சித்திரவதைக்கு உள்ளாகினர்.

இத்தகையவர்களுக்காக நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. சித்திரவதைக்கு உள்ளான இந்த இளைஞர்களைப் பாதுகாப்பதற்காக அவர்கள் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் ஆள் கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இவற்றுக்கெல்லாம் பெரும் எண்ணிக்கையான சட்டத்தரணிகள் தேவைப்பட்டனர். அந்தத் தேவையை நிறைவு செய்வதற்கு ஒரு தமிழ் சட்டத்தரணிகள் பட்டாளமே கொழும்பில் இயங்கிக் கொண்டிருந்தது.

சிரேஷ்ட சட்டத்தரணிகள் எம்.சிவசிதம்பரம், என்.சத்தியேந்திரா, சி.வி.விவேகானந்தன், ஜி.குமாரலிங்கம், எஸ்.சந்திரகா சன், ஜி.பேரின்பநாயகம், என்.நவரத்தினம் (கரிகாலன்), கனக. மனோகரன், பாக்கியநாதன் என அந்தப் பட்டியல் நீண்டது. சிரேஷ்ட சட்டத்தரணிகள் பாலதம்பு, கொல்வின் ஆர்.டி.சில்வா, நடேசன், புள்ளநாயகம் போன்றோரின் சேவைகளும் கூட ஒழுங்கு படுத்தப்பட்டன.

ஆனால், எல்லா நிலைமைகளையும் 1983 ஆடிக் கலவரம் அடியோடு புரட்டிப்போட்டது. நாம் மேற்சொன்ன சட்டத்தரணி கள் எல்லோரும் 83 கலவரத்தை அடுத்து தமிழகத்திலும், பிற இடங்களிலும் தஞ்சம் புகுந்து இடம்பெயர, இராணுவ முகாம் களிலும் தடுப்புச் சிறைகளிலும் சிக்கிக் கொண்ட தமிழ்க் கைதிகள் ஏதிலிகளாக - யாரும் கவனிக்க ஆள் இல்லாத நபர்களாயினர்.

அப்போது தொடக்கம் அந்தப் பொறுப்பை குமார் பொன்னம்பலம், மோதிலால் நேரு, விநாயகமூர்த்தி என்ற காங்கிரஸ் அணி தான் பொறுப்பேற்றது.

அன்று தொட்டு இப்போது மறையும் வரை தமிழ்க் கைதிகளுக்காக மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்தவர் விநாயகமூர்த்தி.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இன்னும் சிக்கி வாடிக் கொண்டிருப்பவர்களும், ஏற்கனவே விடுதலையாகி களத்திலும் புலத்திலும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுமான பல தமிழர்களின் மனச்சாட்சி இந்தப் பெரிய மனிதனின் அளப்பரிய - கைம்மாறு எதிர்பாராத - சட்டப் பணி குறித்து என்றும் பேசிக் கொண்டிருக்கும்.

அரசியலில் அற்ப சலுகைகளுக்காக விலை போகாத ஒரு கொள்கைவாதி அவர்.

தனது கடைசிக் காலத்தில் வயதால் மூப்படைந்து, உடலால் பாதிக்கப்பட்டுவிட்ட காரணத்தால் அவரின் சட்டப்பணி பாதிப்புற்றிருந்தது என்பது உண்மையே. இத்தகைய 'உண்மைத் தொண்டனே' இன்றைய சமூகத்தின் அவசர - அவசிய - தேவையாவார்.

# பாதித்தோரின் அடிப்படைப் பிரச்சினை ஒருவார காலத்துக்குள் தீர்க்கப்படும்!

## உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, மே 31

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் ஒரு வார கால பகுதிக்குள் தீர்க்கப்படும் என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார். அரசு இதற்கான மிகப் பெரும் வேலைத் திட்டம் ஒன்றை எடுத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதுவரையில் 180 பேர் உயிரிழந்துள்ளனர். 110 பேர் காணாமற் போயுள்ளனர். பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை சுமார் 5 லட்சம் பேர் ஆகும். இடம்பெயர்ந்தோர் 76 ஆயிரம் பேர் 368 நலன்புரி முகாம் களில் தங்கியுள்ளனர்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மக்கள் பெற்றுள்ள வர்த்தக வங்கி மற்றும் வங்கி கடன் தனியார் வங்கிக் கடன்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.- என்றார்.

இதேவேளை அங்கு கருத்து தெரிவித்த கல்வி அமைச்சர், வெள்ளம் மற்றும் மண் சரிவால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் நேற்று முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை விடுமுறை வழங்கத் தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார். (எ)

# வாக்காளர் இடாப்பு பதிவு நடவடிக்கை அனர்த்தம் ஏற்பட்ட பகுதிகளில் நீடிப்பு!

## தேர்தல்கள் திணைக்களம் தெரிவிப்பு



நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவால் பாதிக்கப்பட்ட மக்கள் வசிக்கின்ற மாவட்டங்களில் வாக்காளர் பெயர் பதிவு இடாப்பு மீள் திருத்தம் செய்யும் நடவடிக்கைக்கான காலத்தை மேலும் நீடிப்பதற்கு தேர்தல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கண்டி பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வாக்காளர் பெயர் பதிவு இடாப்பின் மீள் திருத்தத்துக்குத் தேவையான படிவங்களை நிரப்புவதற்காக வழங்கப்பட்டிருந்த காலம் எதிர்வரும் 7 ஆம் திகதியுடன் நிறைவடைய இருந்த போதிலும், பாதிக்கப்பட்ட மக்கள் வசிக்கின்ற மாவட்டங்களில் இந்தக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அனர்த்த நிலைமை காரணமாக வீடுகளை இழந்தவர்கள் இடையூறுகள் இன்றி வாக்காளர் பெயர்ப் பதிவு படிவத்தை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

# சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாப்பதும் அரசின் பொறுப்பே!

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டு. பிராந்திய இணைப்பாளர் கூறுகிறார்



இறையாண்மையுள்ள நாட்டில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டரீதியான பொறுப்பு அரசுக்கு உள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வின் மட்டக்களப்பு பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மொழி உரிமை பற்றிய செயலமர்விலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் கவனம் தற்போது அதிகரித்துள்ளது. ஒரு நாட்டின் சமூக, பொருளாதார அரசியல் அபிவிருத்தியைத் தீர்மானிக்கும் பொறுப்பு இறைமைமிக்க ஓர் அரசுக்கு உரியது.

1988ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் தமிழ் மொழி அரச மொழியாக நடைமுறைப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சிங்களத்துடன் தமிழும் நிர்வாக மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், எந்த நபரும் தமிழில் தொடர்புகொள்ளவும் பதிலைப் பெறவும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் உரிமையுள்ளது. இலங்கை அரசமைப்பின் நான்காம் அத்தியாயத்தில் இலங்கையின் தேசிய மொழிகள் சிங்களமும், தமிழும் என குறிப்பிடப்பட்டுள்ளது.- என்றார். (எ)

எமது பிரதேசத்திலிருந்து விலங்கு விசர் நோயை ஒழிப்போம்!
விலங்கு விசர் நோயானது நாய்கடியினால் மட்டுமல்ல, சிறு நகக் கீறலால் கூட ஏற்படலாம். ஆபத்தினை உணர்வோம். அவதானமாக இருப்போம்.



காட்டு விலங்குகளை செல்லப் பிராணிகளாக்க வேண்டாம். அது ஆபத்தானது.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

### நாளை

01.06.2017
வியாழக்கிழமை

நட்சத்திரம் : மகம் பி.ப 4.49 வரை
திதி : ஸப்தமி பி.ப 12.18 வரை

சுபநேரம் : 7.22 - 8.52 வரை
இராகுகாலம் : 1.22 - 2.52 வரை

# முன்னாள் எம்.பி. விநாயகமூர்த்திக்கு சாவகச்சேரியில் அஞ்சலி









கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த அரசியல்வாதியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்திக்கு சாவகச்சேரியில் நேற்று செவ்வாய்க்கிழமை அஞ்சலி இடம்பெற்றது.

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் சாவகச்சேரி நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சிறிதரன், வட மாகாண சபை அமைச்சர் த.குருகுலராஜா, மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், தமிழரசுக் கட்சியின் அமைப்பாளர் க.அருந்தவபாலன், சுதந்திரக் கட்சியின் யாழ. மாவட்ட அமைப்பாளர் அகிலதாஸ், சாவகச்சேரி வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், ஆசிரியர்கள் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். அன்னாரின் பூதவுடல் கொடிகாமத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டுசாவகச்சேரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. (ஐ-21-59)





## கோட்டாபயவுக்கு எதிரான அவன்காட் வழக்கு ஜூலை 12 இல்!

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ அவன்காட் நிறுவன முன்னாள் தலைவர் ஆகியோருக்கு எதிரான ஊழல் மோசடி வழக்கு ஜூலை 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

கொழும்பு பிரதம நீதிவான் லால் ரணசிங்க பண்டார நேற்றுமுன்தினம் இந்த வழக்கின்விசாரணைக்கானதிகதியை அறிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ, நிசங்க சேனாதிபதி உள்ளிட்டவர்கள் மீது, காலிக்கு அப்பால் சட்ட விரோதமானமுறையில்மிதக்கும் ஆயுதக்களஞ்சியத்தைஇயக்கியதாககுற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் இலங்கைக் கடற்படைக்கு பல கோடி ரூபா வருமான இழப்பை ஏற்படுத்தியது என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஐ)

## ஜப்பான் செல்லவுள்ளார் மஹிந்த!

கொழும்பு, மே 31

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட விஜயமாக இன்று ஜப்பான் செல்லவுள்ளார் என்று ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

10 நாள்கள் அங்கு தங்கியிருக்கும் அவர், ஜப்பானிலுள்ள சில பௌத்த விகாரைகளில் இடம்பெறும் சமய நிகழ்வுகளில் பங்கேற்பார் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## விநாயகமூர்த்தி எம்.பியின் மறைவுக்கு சித்தார்த்தன் இரங்கல்

யாழ்ப்பாணம், மே 31

பிரபல சட்டத்தரணியும், மனித உரிமைவாதியும் தமிழ் அரசியல் தலைவர்களில் ஒருவருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த துயரங்களைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

அன்பானவர், மிகவும் எளிமையானவர், முதிர்ந்த அரசியல்வாதி என்ற பண்புகளுக்கும் அப்பால் அவர் எமது இனத்துக்கு ஆற்றிய கடினமான சேவைகளை இத்தருணத்தில் நெஞ்சில் நிறுத்திக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வாறு, ஜனநாயக மக்கள் விடுதலைமுன்னணி(புளொட்) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலங்களில் மட்டுமன்றி அதற்குமுன்னும்பின்னும் சிறைகளில் வாடும் தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காக அயராது உழைத்தவர். கட்சி பேதங்களின்றி அனைத்து விடுதலை அமைப்புக்களதும் போராளிகளது விடுதலைக்கான ஆலோசனைகளையும், உடல் உழைப்பையும் அள்ளித் தந்தவர்.

சிறைகளுக்குள் செல்லமுடியாத சூழலில் இருந்த பெற்றோர்களுக்காகவும், உறவினர்களுக்காகவும் சிறைச்சாலைகளுக்கு சென்று அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்தவர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கோரமான பக்கங்களை தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வந்த அவர், மாற்றீடாக வரவிருந்த சட்டமூலத்தில் சிறுபான்மை இனங்களின் அடிப்படை உரிமைகளை அச்சுறுத்தும் விடயங்கள் இடம்பெறக் கூடாது என்பதற்காகவும் போராடி வந்தார்.

அடிப்படை மனித உரிமைகளுக்காகவும், கருத்துச் சுதந்திரத்துக்காகவும் போராடியவர்களின் குரல்வளைகள் இறுக்கப்பட்டுக் கொண்டிருந்த நீண்டதொரு காலகட்டத்தில் தனது மூப்பு, நோய்வாய்ப்பட்ட நிலைமைகளை எல்லாம் புறக்கணித்துச் செயற்பட்ட அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட இரண்டு கால கட்டங்களிலும் அவசர கால சட்ட நீடிப்பை எதிர்ப்பதில் மிகவும் தீவிரமாக இருந்தார்.

தமிழ் மக்களின் அரசியல் பரப்பில் ஒரு தனித்துவமான மனிதனின் இடம் வெற்றிடமாகியுள்ளது. அன்னாருக்கு எமது இதயபூர்வமான அஞ்சலிகளை மீண்டும் காணிக்கையாக்குகின்றோம்.- என்றுள்ளது. (ஐ)




ரமழான் பல சிறப்புகள் அடங்கி மாதமாகும். அல்லாஹுத்த ஆலா தனது திருமறையிலே கூறுகின்றான்.

"இந்த மாதமானது எத்தகையது என்றால் நேர்வழி காட்டுபவனின் அத்தாட்சியாகவும் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும் இருக்கக்கூடிய அல்குர் ஆன் இறங்கிய மாதமாகும்."

ஆகவே இஸ்லாமிய சகோதரர்களே நாம் இந்த மாதத்தைப் பேணி அல்லாஹ்வின் நல்லாசிகளைப் பெற்று சுவர்க்கத்தை அடைவோமாக!

31.05.2017
தொழுகை நேரம்
சுபஹ் - 4.28 மு.ப
லுஹர் - 12.08 பி.ப
அஸர் - 3.37 பி.ப
மஃரிப் - 6.25 பி.ப
இஷா - 7.41 பி.ப

# சக இனத்தவரை அடிமைப்படுத்தும் நோக்கில் தமிழர்கள் எப்போதுமே செயற்படவில்லை!

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கலையரசன் தெரிவிப்பு

அம்பாறை,மே 31

சக இனத்தவர்களை அடிமைப்படுத்தும் நோக்கில் தமிழர்கள் எப்போதும் செயற்படவில்லை. மாறாகத் தமிழ் மக்கள் மீதே எப்போதும் ஆக்கிரமிப்புக்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

-இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்தமட்டில் நாம் சகோதர இனமான முஸ்லிம் மக்களுடன் இணைந்து தேசியப்பிரச்சினைக்கு நல்லிணக்க அடிப்படையில் தீர்வு காண முயற்சிக்கிறோம். ஆனால், அவர்கள் அந்தநிலைப்பாட்டில் மாறுபட்ட கருத்துக்களுடனேயே உள்ளார்கள். நாங்கள் எந்த இனத்தையும் அடிமைப்படுத்தக்கூடிய விதத்தில் எந்த செயற்பாடுகளையும் முன்னெடுக்கப் போவதில்லை.

தமிழர்கள் திட்டமிட்ட முறையிலே கலாசார, அபிவிருத்தி மற்றும் அரசியல் ரீதியாகப் புறக்கணிக்கப்பட்ட வரலாறுகள் நிறையவே உள்ளன. இப்போதும் சில தமிழ்க் கிராமங்கள் தமிழ் பெயருடன் மாத்திரம் இருக்கின்றன. ஆனால் அங்கு தமிழர்கள் வாழவில்லை. நிந்தவூர் தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடம் ஆகும். ஆனால், அங்கு இப்போது நூற்றுக்கும் குறைவான குடும்பங்களே வாழ்ந்து வருகின்றன.



சம்மாந்துறை, அக்கரைப்பற்று போன்ற இடங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்க்குடும்பங்கள் குடும்பம் குடும்பமாகத் திட்டமிட்ட முறையில் மதமாற்றங்களுக்குள்ளாகி இருக்கின்றமையைக் காண முடிகின்றது. அவ்வாறானவர்களை மதமாற்றத்தில் இருந்து தடுப்பதற்கு ஆலயங்கள், இந்து அமைப்புக்கள் கிராமம், கிராமமாகச் சென்று உழைக்க வேண்டும். -என்றார். (ச)

## ஆலயத்தில் சங்கிலி அறுப்பு: 7 பெண்கள் சிக்கினர்!

களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறுப் பகுதியில் அமைந்துள்ள ஆலயம் ஒன்றில், பெண்களின் சங்கிலிகளை அறுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர் என சந்தேகிக்கப்படும் பெண்கள் எழுவரை பொலிஸார் கைது செய்தனர்.

பெரியகல்லாறு ஸ்ரீ சிவசுப்ரமணியர் ஆலயத்தின் கும்பாபிசேகம் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டனர். இதன்போது நான்கு பெண்களின் சங்கிலிகள் அறுக்கப்பட்டமையை அடுத்து, ஆலய நிர்வாகத்தினரும், இளைஞர்களும், இணைந்து மேற்படி அபகரிப்பில் ஈடுபட்ட ஏழு பெண்களை மடக்கிப் பிடித்தனர். இதனைத் தொடர்ந்து களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார், ஏழு பேரையும் கைது செய்தனர். (ச)

## ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து

# கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!



ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுத்தனர்.

பட்டப்படிப்பைச் சரியான நேரத்தில் நிறைவு செய்ய வேண்டும், பல்கலைக்கழக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. கமராக்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட ஐந்து கோரிக்கைகளை முன்வைத்தே மேற்படி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்துப் பீடங்களைச் சேர்ந்த மாணவர்களும் கலந்து கொண்டனர்.

'குறிப்பிட்ட கால எல்லைக்குள் பட்டப்படிப்பை பூர்த்தியாக்கு', 'மஹாபொல புலமைப்பரிசில் பிரச்சினையை உடனே நிவர்த்தி செய்', 'பொய்யான தீர்வுகள் வேண்டாம் விடுதிப்பிரச்சினையை உடனடியாக நிவர்த்தி செய்', 'அசாதாரணமான வகுப்புத் தடையை நீக்கு', 'மாணவர்களின் சுதந்திரத்தைப் பறிக்கும் சி.சி.ரி.வி. கமெராக்களை உடனே அகற்று' போன்ற வாசகங்களைக் கொண்ட மட்டைகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் ஈடுபட்டனர்.

மேற்படி கோரிக்கைகளை முன்வைத்து இதற்கு முன்னரும் இங்கு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்; விசாரணை ஜூலைக்கு ஒத்திவைப்பு!

மட்டக்களப்பு,மே 31

மட்டக்களப்பு ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்குமாறு வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மட்டக்களப்பு - கல்குடா எதனோல் உற்பத்திச்சாலை விவகாரம் தொடர்பில் கடந்த மார்ச் 21 ஆம் திகதி செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் இருவர் மீது இந்த உற்பத்திச் சாலையின் ஊழியர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதனையடுத்து, குறித்த ஊழியர்களைக் கைது செய்த பொலிஸார் அவர்களை நேற்று செவ்வாய்க்கிழமை வாழைச்சேனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி. றிஷ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த எதனோல் உற்பத்திச்சாலைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையைக் கண்டித்தும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களும் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இடமாற்றத்தை ரத்துச் செய்யக்கோரி

## சுகாதாரத் திணைக்கள சாரதிகள் கிழக்கில் நேற்றுப் போராட்டம்!

கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ், கடமையாற்றும் சாரதிகளை ஏனைய மாகாணங்களிலுள்ளதிணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கான தீர்மானத்தை ரத்துச் செய்ய வேண்டும் எனக் கோரி கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களச் சாரதிகள் நேற்று செவ்வாய்க்கிழமை சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் கல்முனை, அம்பாறை ஆகிய சுகாதார சேவைப் பிரிவுகளில் கடமையாற்றும் சாரதிகளே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் கிழக்கு மாகாண சுகாதார சாரதிகள் சங்கத்தின் செயலாளர் தெரிவிக்கையில்-

கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் சாரதிகளைச் சப்ரகமுவ, ஊவா, மேல் மாகாணம் ஆகிய மாகாண சபைகள் எழுத்து மூலமாகத் தமது திணைக்களங்களுக்கு உள்ளீர்த்துள்ளன. வட மாகாணசபை உட்பட இலங்கையின் ஏனைய 5 மாகாணசபைகளும் ஏனைய திணைக்களங்களுக்கான தமது இடமாற்றங்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளன. ஆனால், கிழக்கு மாகாணத்தில் இந்த இடமாற்றத்தை ரத்துச் செய்ய முடியாது என்றும், உடனடியாக இடமாற்றத்தை நடைமுறைப் படுத்துமாறும் மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் எமக்கு சரியான தீர்வு கிடைக்க வேண்டும். இல்லையெனில் நாடளாவிய ரீதியிலுள்ள சுகாதாரச் சாரதிகள், தாதியர்கள், சுகாதாரச் சிற்றூழியர்கள் ஆகியோரின் ஆதரவுடன் எமது போராட்டம் முன்னெடுக்கப்படும். - என்றார். (ச)

## குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்திக்க ஏறாவூரில் தண்ணீர்த்தாங்கிகள் விநியோகம்!

ஏறாவூர்,மே 31

கிழக்கு மாகாணத்தில் நிலவும் குடி தண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் நோக்கில் பொது அமைப்புக்களுக்கு இலவசமாகத் தண்ணீர்த் தாங்கிகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என கிழக்கு மாகாண முதலமைச்சரின் இணைப்பாளர் செய்னுலாப்தீன் ஹிதாயத்துல்லாஹ் தெரிவித்தார்.

இதில் முதற்கட்டமாக ஏறாவூரின் எல்லைப்புறத்தில் இயங்கி வரும் அபூபக்கர் சித்தீக் பள்ளிவாசல், அரபுக் கல்லூரி மற்றும் ஜாமியா ஆயிஷா சித்தீக்கியா அரபுக் கல்லூரி ஆகிய நிறுவனங்கள் தங்களது அத்தியாவசிய தேவையான குழாய்க்கிணறு மற்றும் தண்ணீர்த் தாங்கிகளைப் பெற்றுத் தருமாறு முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன.

இதற்கு அமைவாக, நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேற்படி இடங்களில் தண்ணீர்த் தாங்கிகள் விநியோகிக்கப்பட்டன. மேலும் குழாய் நீர் இணைப்புக்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. (ச)



## கடமையில் இருந்த பொலிஸ்காரர் மாரடைப்பால் சாவு!

மட்டக்களப்பு - கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள கொடுவாமடுப்பகுதியில் விசேட கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், மாரடைப்புக் காரணமாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

ஏறாவூர் அறபா வித்தியாலய வீதியைச் சேர்ந்த அமர்தீன் அப்துல் ஹமீத் (வயது-44) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (ச)

# வலுப்பெறுகிறது 'மோரா' புயல்; மேலும் 2 நாள்களுக்கு கடும் மழை!



கொழும்பு, மே 31

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் 'மோரா' புயலாக உருவாகி இருப்பதால், மேலும் இரு நாள்களுக்கு கடும் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது பாதிக்கப்பட்ட தென் பகுதி மக்களுக்கு பேரிடியாக அமைந்துள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 201 ஆக அதிகரித்துள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தென்மேற்கு பகுதியில் கடந்த 25ஆம் திகதி முதல் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பெய்து வரும் இந்த மழையால் வெள்ளப் பெருக்கும், பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டு உள்ளது.

இதனால், சுமார் 5 இலட்சம் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். நிலச்சரிவால் மண்ணுக்குள் புதைந்து கிடந்த பலரின் உடல்கள் நேற்றுமுன்தினமும் மீட்கப்பட்டன. இதன் மூலம் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 201 ஆக உயர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழை, வெள்ளத்தில் சிக்கி உள்ள மக்களை மீட்கும் பணியிலும், நிவாரண உதவிகள் வழங்குவதிலும் இலங்கை முப்படையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

வங்கக் கடலில் அந்தமான் அருகே உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை, தற்போது வலுவடைந்து அதி தீவிர புயலாக மாறி வருகிறது. 'மோரா' எனப் பெயரிடப்பட்ட இந்தப் புயல் மேற்குவங்கத்துக்குத் தென் கிழக்குக் கடலில் மையம் கொண்டுள்ளது.

இதனால், ஆகாயத்தில் காணப்படும் முகில் கூட்டத்திற்கு மத்தியில் மழை மற்றும் காற்றினுடனான காலநிலை ஏற்படக்கூடும். நாட்டில் விசேடமாக மத்திய மலைப்பிரதேசத்தின் கிழக்கு பகுதியிலும் நாட்டை சுற்றியுள்ள கடற்பிரதேசத்திலும் அடிக்கடி சுமார் 80 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு, சப்ரகமுவ, தெற்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

விசேடமாக மத்திய மலைப் பிரதேசங்களில் கிழக்கு சரலில் 100 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட கடும் மழையை எதிர்பார்க்கலாம்.

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# கிராமங்களுக்குள் ஊடுருவியுள்ள பெரிய முதலைகளால் ஆபத்து!

## மக்களுக்கு அவசர எச்சரிக்கை



கொழும்பு, மே 31

தென் மாகாணத்தில் ஏற்பட்டுள்ளபெரும்வெள்ளநிலையை அடுத்து, கங்கைகளிலுள்ள பெரிய முதலைகள் கிராமங்களுக்குள் ஊடுருவியுள்ளன.

இந்தநிலையில், மாத்தறை நில்வளா கங்கையிலிருந்து வெளிவரும் வெள்ள நீருடன் பெரிய முதலைகள் வந்துள்ளமையால் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த முதலைகளின் எண்ணிக்கைகளை சரியான முறையில் கணக்கிட முடியாதெனவும், வெள்ள நீர் குறைந்த போதிலும் நீரில் இறங்குவதை தவிர்க்குமாறு திணைக்களம் மக்களுக்கு அறிவித்துள்ளது.

வெள்ள நீர் குறையும் போது மீண்டும் முதலைகள் கங்கைகளுக்குச் செல்வதற்கான வாய்ப்பு உள்ளமையினால் வனவிலங்கு அதிகாரிகள் இது தொடர்பில் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களை தவிர வெள்ள நீரை பார்வையிடுவதற்கு வரும் பலர் நீரில் இறங்குகின்றனர் என்றும் இதன்போது முதலைகளின் தாக்குதலுக்கு முகங்கொடுக்க வேண்டிய அபாயம் உள்ளது என்றும் அவர் மேலும் எச்சரித்துள்ளார். (க)

# இரத்தினபுரியில் மண்சரிவு அபாயம்; பொதுமக்கள் வெளியேற்றப்பட்டனர்!

கொழும்பு, மே 31

இரத்தினபுரி மாவட்டத்தின் பொத்குல் மலைப்பகுதியில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதால் அங்கு வசித்த பொதுமக்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்த்தப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி பொத்குல் மலைப்பகுதியில் திடீரென்று நீர் ஊற்றொன்று வடிந்தோடத் தொடங்கியுள்ளது என அங்கு வசித்த பொதுமக்கள் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த மீட்புக் குழுவினர் நேற்றுமுன்தினம் நள்ளிரவை அண்மித்த நேரத்தில் அங்கு வசித்த மக்கள், சுமார் 20 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேர் அவ்வாறு பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்த்தப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.



அத்துடன், இந்தப் பகுதியில் இருக்கும் இன்னொரு மலையிலும் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன என்று பொது மக்கள் வழங்கியுள்ள தகவல் குறித்தும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தீவிர கவனம் செலுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்காக

# மாடியில் இருந்து மகளை தூக்கி வீசினார் தந்தை!

கொழும்பு, மே 31

ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்காக மேல் மாடியில் இருந்து மகளை தந்தை ஒருவர் தூக்கி வீசிய சம்பவம் ஒன்று கெக்கிராவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கெக்கிராவ, கல்கிரியாகம பிரதேசத்திலுள்ள இரண்டு மாடி வர்த்தக நிலையத்தில் நேற்று முன்தினம் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது அங்கு இரண்டு ஊழியர்கள் கடுமையான தீக் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்கிரியாகம பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர்கள் இருவரும் தம்புள்ளை வைத்திய



சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தீயில் சிக்கியமையால் வர்த்தக நிலையத்தின் உரிமையாளர், அவரது மனைவி மற்றும் இரண்டு வயது மகள் ஆகியோர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தத் தீ விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் மகளுடன் மேல் மாடியில் இருந்த இந்த தம்பதியினர் தங்கள் மகளை காப்பாற்றுவதற்காக மேல் மாடியில் இருந்து மகளை வீசி எறிந்துள்ளனர்.

எனினும் கீழிருந்தவர்கள் குழந்தையைப் பாதுகாப்பாக ஏந்தியமையால், அவர் எந்த வித உயிராபத்தும் இன்றி பாதுகாப்பாக உள்ளார்.

மேல் மாடியில் இருந்து கணவன் - மனைவி தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கீழே குதித்தமையால் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, இந்தத் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள போதிலும் தீ சம்பவத்திற்கான காரணம் இது வரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# திருவோடு ஏந்தி பிக்குமார் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் சேகரிப்பு!

கொழும்பு, மே 31

வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் முதியங்கனை ரஜமஹா விகாரையைச் சேர்ந்த பிக்குமார் திருவோடு ஏந்தி நிவாரணப் பொருள்கள் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வரகாகொட ஞானரத்ன தேரர் மற்றும் பதுளை முதியங்கனை மகாவிகாரையின் பிரதம விகாராதிபதி முருத்தெனியே தம்மரத்ன தேரர் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் இவ்வாறு திருவோடு ஏந்தி நிவாரணம் சேகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதியங்கனை விகாரையில் தங்கியிருக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட இளம் பிக்குகள் திருவோடு ஏந்தி பதுளை நகரில் உலர் உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருள்களைச் சேகரித்துள்ளனர்.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருள்கள் பொருத்த விகாரைகள் ஊடாக வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பிவைக்கப்படஉள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சர்வதேச சந்தையில் தேயிலை விலை மேலும் அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு!

கொழும்பு, மே 31

சர்வதேச சந்தையில் தேயிலைக்கான விலை மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச தேயிலை வணிக முகவர்களை மேற்கோள்காட்டி ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கென்யா மற்றும் இந்தியாவில் இருந்து சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் அளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனால் கடந்த தினங்களில் தேயிலையின் விலை மிகவும் அதிகரித்திருந்தது.

தற்போது இலங்கையிலும் அசாதாரண காலநிலை உள்ளிட்ட காரணங்களால் தேயிலையின் ஏற்றுமதி குறைவடைந்துள்ளது.

இந்த நிலையில், தேயிலை விலை அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தேயிலை ஏற்றுமதி குறைவடைந்திருப்பினும், வருவாய் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.(எ)

# பாதிக்கப்பட்டோருக்கு சதொச ஊடாக இலவச உலருணவு வழங்க நடவடிக்கை

## கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் தெரிவிப்பு



கொழும்பு, மே 31

சீரற்றகாலநிலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கு வழங்கத் தேவையான, உலர் உணவுப் பொருள்களை லங்கா சதொச நிலையங்கள் மற்றும் களஞ்சிய அறைகளில் இருந்து குறைவின்றி இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்று கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சின் செயலாளரின் கையெழுத்துடன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நாட்டின் பல பாகங்களிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சதொச கிளைகள் மூலமும், சதொச களஞ்சிய சாலைகள் மூலமும் அத்தியாவசியப் பொருள்களையும், ஏனைய உலர்உணவுப்பொருள்களையும் விநியோகிப்பதற்கு கைத் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் அவசர நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுதொடபில் அந்தந்த பிரதேசங்களிலுள்ள அரச அதிபர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் அமைச்சர் ஆலோசனைகளையும், அறிவுறுத்தல்களையும் வழங்கி உள்ளார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கவென அவர்களுக்குத் தேவையான பொருள்களை அரச அதிபர்களும், பிரதேச செயலாளர்களும் சதொசவில் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சதொச தலைமையகத்திலும், சதொச கிளைகளிலும் அரச உயர் அதிகாரிகள் தேவையான பொருள்களை பெற்றுக் கொள்ள முடியும். பாதிக்கப்பட்டவர்களின் தேவைகள் கருதி அதனை விநியோகிக்குமாறும் அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

பாதிப்புக்கு உள்ளானவர்கள் தமக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளரிடம் தெரிவிக்க முடியும். அரச உயர் அதிகாரிகள் பாதிப்படைந்தோருக்குத் தேவையான பொருள்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.- என்றுள்ளது. (எ)

## தினசரி ராசி பலன் 31.05.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 17 ஆம் நாள். ஷஷ்டித்திதி காலை 7.11 மணி வரை. பின்னர் ஸப்தமி. நட்சத்திரம்: ஆயிலியம் பகல் 11.13 மணி வரை. பின்னர் மகம். மரணயோகம் காலை 7.11 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: பகல் 12.07 மணி முதல் 1.41 மணி வரை. சுபநேரம்: மாலை 4.22 மணி முதல் 5.52 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: வைகாசி மாத வளர்பிறை ஸப்தமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: ஆயிலியம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** சலனம் மிகுந்த நாள். வருமானம் குறையும். வர்த்தகர்களுக்கு பங்கு முதலீடுகள் ஏமாற்றம் தரும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும்.

**ரிஷபம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பண வருவாய் இருப்பினும் செலவுகளும் அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு வேலைப்பளு கூடும். பெண்கள் ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்தல் நன்று.

**மிதுனம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. வெளிநாட்டு விடயங்களில் எதிர்பார்த்தவாறு கருமங்கள் அமையும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வும், வருமானத்தில் அதிகரிப்பும் உண்டாகும்.

**கடகம்:** யோகமான நாள். தனலாபம் பெருகும். வர்த்தகர்களுக்கு கணிசமான லாபம் கிடைக்கும். வீட்டில் மங்கல நிகழ்ச்சிகள் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் அனுசரணையால் விரும்பிய உயர்ச்சிகள் கிடைக்கும்.

**சிம்மம்:** சஞ்சலமான நாள். மனக்குழப்பம், கவலை அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் வரத்தாமதமாகும். குடும்பச்செலவுகளை மிகக் கஷ்டத்துடனே சமாளிக்க நேரும்.

**கன்னி:** நன்மையான நாள். உத்தியோகத்தர்களுக்கு வசதியான இடமாற்றங்களும், சம்பள உயர்வுகளும் கிடைக்கும். தொழில் இல்லாதவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிட்டும்

**துலாம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தர்களுக்கு பணவிரயங்களும், தொழிலில் தவறுகளும் எற்படும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**விருச்சிகம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. உத்தியோக உயர்வுகள் கிடைக்க வாய்ப்புண்டு. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகளுடன் தொழில் விருத்தி உண்டாகும்.

**தனுசு:** குழப்பமான நாள். மனம் குழப்பமடையும். குடும்பத்தில் தகராறுகள் உண்டாகும். பெண்களுக்கு விவாகப்பேச்சுகளில் தடை, தாமதம் ஏற்படும்.

**மகரம்:** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. எண்ணிய கருமங்கள் தாமதமாகும். வர்த்தகத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும். வீண் அலைச்சல்கள் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை.

**கும்பம்:** சுபீட்சமான நாள். குடும்பத்தில் அதிக மகிழ்ச்சியால் சுபீட்சம் உண்டாகும். குடும்பத்தில் திருமணகாரியங்கள் ஒப்பேறும். வெளிநாட்டு உறவினரிடமிருந்து விலையுயர்ந்த பொருள்கள் வந்து சேரும்.

**மீனம்:** அதிர்ஷ்டமான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். அரச உதவியால் சிலருக்கு வீடு, காணி என்பன கிடைக்கும். போட்டி, பந்தயங்களில் அதிர்ஷ்டம் உண்டாகும்.

சந்திராட்டம நாள்: அவிட்டம் 4 ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

# முஸ்லிம்கள் எதிர்நோக்கும் நெருக்கடிக்கு ஆட்சி மாற்றம் ஒருபோதும் தீர்வாகாது

## மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கூறுகிறார்



கொழும்பு, மே 31

நாட்டில் வாழும் முஸ்லிம் சமூகம் தற்போது எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்கு ஆட்சி அதிகார மாற்றம் தீர்வாகாது என்று புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

முஸ்லிம் சமூகம் இன்று எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதாயின் அந்தச் சமூகம் ஒற்றுமைப்பட்டு அரசியல் அதிகாரம் உள்ள பலமுள்ள சக்திகளாக மாற வேண்டும்.

அளுத்கமை - பேருவளை போன்ற இடங்களில் பல சம்பவங்கள் ஏற்பட்ட நேரத்தில் கடந்த ஆட்சியைத்தூக்கி எறிந்து மைத்திரிபால சிறி சேனவை அந்த இடத்துக்குக் கொண்டு வந்தால் முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாக்கலாம் என்று கருதி முஸ்லிம் சமூகத்திலே 90 சத வீதமான மக்கள் வாக்களித்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கினோம்.

நாங்கள் அனைவரும் அதிகாரம் உள்ளவர்களாக மாறாத வரை எங்களுக்குரிய பிரச்சினைகளுக்கு ஒரு போதும் தீர்வு காண முடியாது.-என்றார்.(எ)



125 வருடங்கள் பழைமைவாய்ந்த நுவரெலியா பிரதான தபால் நிலையத்தை, தனியார் ஒருவருக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நுவரெலியா தபால் நிலைய ஊழியர்களும் பொதுமக்களும், நேற்றுமுன்தினம் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நுவரெலியா நகருக்குச் செல்கின்ற உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அந்தத் தபாலகம் வெகுவாக கவரும். ஆங்கிலேயரால் பிரித்தானிய கட்டட கலைஞர் ஒருவரால் வரலாற்றுப் பெறுமதிமிக்க இந்தத் தபால் காரியாலய கட்டடம் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இலங்கை தபால் திணைக்களம் வசமிருக்கின்ற விலைமதிக்கமுடியாத சொத்துகளில் நுவரெலியா தபாலகமும் ஒன்றாகும். (எ)

# புகைத்தலை ஒழிப்போம்! புது வாழ்வு பெறுவோம்!!

உலக சுகாதார நிறுவனத்தின் உறுப்பு நாடுகள் சேர்ந்து உலக புகைத்தல் எதிர்ப்பு நாளை 1987 ஆம் ஆண்டில் அறிவித்தது. 1988ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தின் WHA 40.38 தீர்மானப்படி ஏப்ரல் 07ஆம் திகதி இத்தினம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டாலும்கூட, அதேயாண்டில் WHA 42.19 தீர்மானப்படி மே 31 ஆம் திகதி அனுஷ்டிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது.

உலகில் காணப்படும் மெல்லக் கொல்லும் நச்சுத் தன்மை மிக்க தாவரங்களில் புகையிலையும் ஒன்றாகும். இத்தாவரத்தின் தண்டுப் பகுதியை விடவும், இலைப் பகுதியிலேயே அதிக இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுகின்றன. இது மருத்துவ, விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆய்வுகளின் படி புகையிலையில் சுமார் நாலாயிரம் இரசாயனப் பதார்த்தங்கள் உள்ளடங்கியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவற்றில் முப்பதுக்கும் மேற்பட்டவை நச்சுத் தன்மையானவை. குறிப்பாக ஐதரசன் சயனைட், அமோனியம், ஆசனிக், டி. டி. ரி, மெத்தனோல், காபன்மொனக்சைட், பென்சின், தார், நிக்கோட்டின் போன்றன சுட்டிக்காட்டத்தக்கவை.

இன்றைய காலகட்டத்தில் மனிதன் புகையிலையை வெவ்வேறு விதமாகப் பாவிக்கிறான். அதாவது இந்த நச்சுத் தன்மை மிக்க புகையிலையை வெற்றிலையுடன் சேர்த்து மெல்கிறான் தூள் புகையிலையை பொடியாக மூக்கில் போட்டுக்கொள்கிறான் மற்றும் குழாய்களை பாவித்து புகையை உறிஞ்சுதல், பீடி, சிகரெட், சுருட்டு, பைப் என்று பல்வகையாக புகையிலையை கோடிக்கணக்கானோர் பாவித்து வருகிறார்கள்.


உலகில் மனித இறப்புகளைத் தோற்றுவிக்கும் முக்கிய காரணிகளில் புகையிலை இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இந்தச் சிறப்பு நாளின் அறிவிப்பு மூலம் உலக சுகாதார நிறுவனம் புகைத்தலால் தமக்கும் பிறருக்கும் ஏற்படும் தீங்குகளிலிருந்து தவிர்த்துக் கொள்வதை வலியுறுத்துவதன் மூலம் ஆண்டுதோறும் புகையிலை சம்பந்தமான இறப்புகளைக் குறைக்க முடியும் எனவும் எதிர்பார்க்கிறது.

உலகளாவிய ரீதியில் நாளொன்றுக்கு 750 பேர் புகையிலைப் பாவனையால் மரணித்து வருகின்றார்கள். புகைத்தலுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமடையாத பட்சத்தில் உலகளாவிய ரீதியில் அடுத்த 50 ஆண்டுகளில் 520 மில்லியன் மக்கள், புகைப் பழக்கத்துக்கு பலியாகும் அபாயம் உள்ளது என்றும் உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கிறது. இதனால் இன்று வளர்ந்தோரிடையேயும் இளைஞர்களிடையேயும் புகைப்பாவனையைத் தவிர்த்தல் தொடர்பாக வலியுறுத்தப்படுகிறது.

அமெரிக்க தேசிய போதைப்பொருள் தடுப்பு நிறுவனத்தின் முன்னை நாள் பணிப்பாளர் 'வில்லியம் பொலின்' வெளியிட்டிருந்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்ட விடயங்கள் இங்கு கவனத்திற் கொள்ள வேண்டியவை. 'புகையிலை மதுவைவிட ஏன் ஹெரோயினை விடவும் பாவனையாளர்களை அதிகம் அடிமைப்படுத்தக் கூடியது. அடிமையானவர்களில் 60% - 90% வீதமானவர்கள் தம் பழக்கத்திலிருந்து மீட்சி பெற முடியாதவர்களாக உள்ளனர். வளைகுடா நாடுகளில் புகைப்பிடிப்பவர்களின் மற்றும் போதைப்பொருள்களை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வருகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

உலக சுகாதார நிறுவனம் வளைகுடா நாடுகளில் சமீபத்தில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டு சில புள்ளி விவரங்களை தந்திருந்தது. வளை குடாவில் உள்ள மக்கள் தொகையில் 22 சதவீதமான நபர்கள் புகைப்பிடிக்கிறார்கள், 25 சதவீதமான மக்கள் போதைப் பொருள்கள் உபயோகிப்பதால் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 15 மற்றும் 20 சதவீதமான மக்கள் அதனை உபயோகிப்பதால் இரத்தக் கொதிப்பு நோய் மற்றும் அது சம்பந்தப்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

'பகையைக் கூட புகையாய் ஊதித் தள்ளிவிடும் மனிதன் இந்தப் புகை என்னும் பகையை பகைக்க முடியாமல் திணறுகிறான்'. உண்மையில் புகைத்தலை ஏன் பலரால் நிறுத்த முடியாமல் இருக்கிறது? புகைத்தலால் உடலில் என்ன மாற்றம் ஏற்படுகின்றது? இவ்விடத்தில் சிறிதேனும் ஆராய்தல் வேண்டும். புகைப்பவர்கள் புகையை உள்ளுக்குள் இழுக்கும் ஒவ்வொரு வேளையும் நிக்கோட்டின் மின்னல் வேகத்தில் மூளையைச் சென்றடைகிறது. புகையிலையில் நிக்கோடின் எனும் நச்சுப் பொருளுடன் வேறும் 700 வகையான இரசாயனக் கூட்டுப் பொருள்கள் சேர்ந்துள்ளன என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவற்றுள் சில மனித குலத்துக்கு பேராபத்தை ஏற்படுத்தக் கூடிய அதி சக்தி வாய்ந்த நச்சுப் பொருள்களாகும். இவற்றைத்தான் புகை அபிமானிகள் வாயினுள் உறிஞ்சி




நெஞ்சார அனுபவிக்கின்றனர். மூளையில் மனநிலையை மாற்றும் செல்களுக்கு நிக்கோட்டின் செல்வதால் புகைப்பவர்கள் ஓர் ஆறுதலான நிலையை அடைகிறார்கள் என்ற மாயையைத் தோற்றுவிக்கின்றது. இந்த மாயையால் புகைப்பவர்களுக்கு அழுத்தங்கள், பிரச்சினைகள் எல்லாம் குறைந்த மாதிரித் தோன்றும். அதனால் மற்றைய நேரங்களைவிட புகைக்கும் நேரங்களில் கூடிய விடயங்களில் கவனம் செலுத்தக் கூடிய ஒரு நிலையில் தாங்கள் இருப்பதாக அவர்கள் எண்ணுவார்கள்.

இதனால் புகைப்பவர்கள் மனத்தாலும் உடலாலும் நிக்கோட்டினில் தங்கியிருக்கும் ஒரு வேண்டாத பழக்கத்துக்கு ஆளாகின்றனர். இந்தப் பழக்கத்தால் இரத்தத்தில் சிறிதளவு நிக்கோட்டின் குறைந்தவுடனேயே அவர்களுக்கு புகைக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்படுகின்றது. இதன் காரணமாகவே பலர் பணமும் விரயமாகி ஆரோக்கியமும் கெடுகின்றது எனத் தெரிந்தும் புகைத்தலைக் கைவிட முடியாமல் இருக்கின்றனர்.

ஆனாலும், புகைத்தலை நிறுத்துவது அவசியமானது. புகைத்தலை நிறுத்துவதால் இதயத்தில் வரும் நோய்கள் தடுக்கப்படுகின்றன. புற்றுநோய் வருவதற்கான காரணங்கள் குறைக்கப்படுகின்றன. மூச்சு வாங்கல், இருமல், வாய்மணம் போன்றவை இல்லாமல் போகின்றன. பற்கள் பழுப்பு நிறங்கள் நீங்கி வெண்மையாகின்றன. புகைப்பதை நிறுத்தினால் ஒரு காலகட்டத்தில் உடலும் மனநிலையும் வாழ்நாளில் ஒருநாளும் புகைக்காதவர்களின் உடல் மனநிலைக்கு வருகின்றது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

புகையிலை பாவனையால் பலவிதமான நோய்களுக்கு உள்ளாக நேரிடும். அவற்றில் கண்களில் வெள்ளை படருதல், நியூமோனியா, வயிற்று புற்றுநோய், சதையீ புற்றுநோய், சிறுநீரக புற்றுநோய், கழுத்து புற்றுநோய் நுரையீரல் புற்றுநோய், சுவாசத் தொகுதிப் பாதிப்புக்கள், உணவுக் குழாயில் புற்றுநோய், குரல் வளையின் மேற்பகுதியில் பாதிப்பு, வாய் புற்றுநோய், வாயிலும், தொண்டையிலும், பாதிப்பு, இருமல், சளி பாரிசவாதம், இருதய அழுத்தம், இதய நோய்கள் போன்றன குறிப்பிடத்தக்கவை.

அத்தோடு புகையிலை பாவனை காரணமாக இன விருத்தி ஆரோக்கியமும் பெரிதும் பாதிக்கப்படும். குறிப்பாக புகையிலை பாவிக்கும் ஆண்கள் மத்தியில் பாலியல் பலவீனத்தை அதிகரிக்க உதவலாம். அதேநேரம் நிறை குறைந்த குழந்தை பிறப்பும், குறை மாதக் குழந்தை பிறப்பும், கர்ப்பப் பையினுள்ளே சிசு இறந்து பிறப்பதும் புகையிலைப் பாவனையாளர்கள் மத்தியில் அதிகரித்து காணப்படும்.

இதேவேளை, புகைபிடிப்போர் வெளியிடுகின்ற புகையை புகைபிடிக்காதோர் தொடர்ச்சியாக சுவாசிப்பதால் ஆஸ்துமா, இருதய நோய்கள், காசநோய், காதுகளில் தொற்று, சுவாசத் தொகுதி நோய்கள், திடீர் சிசு மரணம் போன்றவாறான பாதிப்புக்களுக்கும் உள்ளாக நேரிடும்.

புகைப்பதை நிறுத்துவதற்கு புகைப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் புகைப்பதை நிறுத்துவதற்கான விருப்பமும் உறுதியும் வேண்டும். இன்றைய விஞ்ஞான உலகில் எந்த சிரமமும் இன்றி ஹிப்னோற்டிக் முறைமூலமும் அக்குபஞ்சர் முறை மூலமும் புகைத்தலை நிறுத்த முடியும் எனக் கூறப்படுகிறது. ஆயினும் சிறிது காலத்தின் பின் இச்சிகிச்சை பெற்றவர் பிரச்சினைகள் அல்லது வேறு காரணங்களால் புகைத்தலை மீண்டும் நாடக்கூடும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

ஆகவே, மனதில் உறுதியுடன் ஒருவர் தானே நினைத்துப் புகைப்பதை நிறுத்துவதே 100 வீதமான வெற்றியைத் தரும். படிப்படியாக ஒருவர் புகைப்பதை. நிறுத்துவதாகக் கூறி பின் மீண்டும் பழைய நிலைக்கு வரக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. எனவே இனிப் புகைப்பதில்லை என்ற முடிவை உறுதியாக எடுத்து உடன் நிறுத்துவதே சிறந்த வழி. ஜேர்மனியில் பிறைபேக் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் யோர்கன் ட்ரொஸ்கே தனது ஆராய்ச்சியில் 80 தொடக்கம் 90 விதமானோர் புகைத்தலை உடனடியாகக் கைவிட்டு வெற்றி கண்டிருக்கிறார்கள் என அறிவித்திருக்கிறார்.

புகைத்தலுக்கு எதிராக நீண்ட காலமாக அறிவுறுத்தலும் பிரசாரமும் செய்யப்பட்டு வந்தபோதிலும் ஆக்கபூர்வமான பலன் பெரியளவில் ஏற்படவில்லை என்றே கூற வேண்டும். உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தலுக்கமைய அநேகமான நாடுகள் புகைபிடிப்பவர்களை எச்சரிப்பதற்காக சிகரெட் பெட்டிகளில் அபாய எச்சரிக்கை வாசகங்களை அச்சிட்டு வருகின்றன. சில நாடுகளில் புகைத்தலை தடுப்பதற்காக சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்ய முடியாது.

பொது இடங்களில் புகைத்தல் முடியாது என்றெல்லாம் சட்டமியற்றப்பட்டுள்ளன. அதேநேரம் பொது இடங்களில் புகைபிடித்தால் தண்டப் பணம் செலுத்த வேண்டும் என்றும் விதிக்கப்பட்டுள்ளது. மறுபுறமாக சில நாடுகள் புகைத்தல் தொடர்பான விளம்பரங்களையும் தடை செய்துள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் சுகாதாரப் பகுதி புகைப்பாவனையால் வரும் தீங்குகளைப் பிரசாரம் செய்யும் அதேவேளை, சிலநாடுகளில் புகையிலையும், மதுபானமும் அரசுக்கு வருமானம் ஈட்டித்தரும் துறைகளாக அமைந்தன. இந்த முரண்போக்கே இந்த நிலை நீடிப்பதற்குக் காரணமாக இருந்தது. குறிப்பாக புகைத்தலின் தீங்குகளைப் பற்றி பிரசாரம் செய்யும் சுகாதாரப் பகுதியினர் அல்லது நிறுவனங்கள் புகைத்தல் தொடர்பான உற்பத்திகளை தடைசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளா திருப்பது வேதனைக்குரியதே. இவற்றால் புகையிலை உற்பத்திகளை தடுக்க முடியாது. ஏனெனில், புகையிலை உற்பத்திகள் மூலமாக அரசுக்கு பெருமளவுக்கு வருமான வரியை ஈட்டுகின்றன.

ஒரு நபர் புகைப்பிடிக்கின்றமையால் அவருக்கு ஏற்படும் கெடுதலைவிட அவர் வெளியிடும் புகையை சுவாசிப்பவர் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார். புகையை சுவாசிக்க நேரும் மக்களுக்கு இதயம் தொடர்பான நோய்கள் வரும் வாய்ப்பு அதிகரிப்பதாக 'நாட்டிங்காம்' பல்கலைக்கழக ஆய்வு ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைப்படி நுரையீரல் புற்றுநோய் 16 வீதத்தால் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு புகைப்பிடிப்பவர்களிடத்திலன்றி பக்கத்தில் இருப்பவர்களிடமே ஏற்பட்டுள்ளது.



காலைக்கதிர்








# ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...? 194

**அமெரிக்காவில் மக்களில் மிகப் பெரும்பான்மையினர் உண்மையான நிலை என்ன? பொருளாதாரம் ஒருபோதும் சிறப்பாக இருக்கவில்லை**

ஜனநாயகக் கட்சியினரின் கூற்றுகள் இருந்தபோதிலும், பொருளாதாரம் ஒருபோதும் சிறப்பாக இருக்கவில்லை மற்றும் அமெரிக்காவை மீண்டும் மகோன்னதம் ஆக்கல் பற்





றிய ட்ரம்ப்பின் வெறித்தனமான பேச்சுகள் இருப்பினும், தொழிலாளர்கள் குறைந்த ஊதியங்கள், வீழ்ச்சியடைந்துவரும் வாழ்க்கைத்தரம் மற்றும் நீண்டகால வேலையின்மை ஆகியவற்றையே எதிர்கொள்கின்றனர். 2008 பொருளாதார உருகுதல் நடந்து கிட்டத்தட்ட ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர், வேலை தேடுவதை நிறுத்தி விட்டவரையும் பகுதி நேர வேலைக்கு நிர்ப்பந்திக்கப்படுபவரையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் உண்மையான 8.6 சதவீத வேலையின்மை வீதமானது, வேலை வெட்டுக்கள் சில்லறைத் துறை மற்றும் உற்பத்தித்துறை இரண்டிலும் (ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் இருந்து 81,000) அழிவுகரமானதாக இருக்கின்றது. GM நிறுவனத்தில் ஆயிரக்கணக்கானோரை வேலை நீக்கியதை அடுத்து, அண்மையில் போர்ட் தனது உலக பணியாளர்களில் பத்து சதவீதத்தை வெட்டியதாக அறிவித்தது.




சம்பளங்கள் தேக்க நிலையில் இருக்க, உத்தியோகபூர்வ பணவீக்கமானது வெளிப்படையாகவே வளர்ந்தது. பொருளாதார ஆய்வின் தேசியக் கழகத்தால் எடுக்கப்பட்ட இந்த மாதம் வெளியான அறிக்கை 2013ல் 27 வயது மனிதனின் ஆண்டு வருமானம், உண்மை அர்த்தத்தில், 1969ல் 27 வயது மனிதன் பெற்றதைக் காட்டிலும் 31 சதவீதம் குறைவு எனக் கண்டது. சராசரி நடுத்தரக் குடும்பத்தின் வருமானம் 1999ல் இருந்து வீழ்ச்சி அடைந்துள்ளது.


Obamacare என்ற பாதையின் ஏழாண்டுகளுக்குப் பின்னர், சுகாதார பராமரிப்பு நெருக்கடி மிகவும் மோசமானதாகவும் கூட ஆகியிருக்கிறது. சட்டத்தின் தாக்கம், ''மிகத் தாராளமான'' உடல்நல காப்பீட்டு பயன்களை வெட்டுவதற்கு முதலாளிகளை ஊக்கப்படுத்தும் அதேவேளை, செலவுகளின் சுமையை பெருநிறுவனங்கள் மற்றும் அரசிடமிருந்து தொழிலாளர்களுக்கு மாற்றுவதாக இருக்கிறது, கடந்த மாதம் விமானம் மற்றும் பாதுகாப்பு பெருநிறுவனமான ஹனிவெல் (Honeywell), ஓய்வுபெற்றவர்களுக்கான நலப் பராமரிப்பு பயன்களை அகற்றும் அண்மைத்திய நிறுவனமாக ஆனது.

ரஷ்யாவுடனான ட்ரம்ப்பின் தொடர்பு என்று கூறப்படுவதன் மேல் ஜனநாயகக் கட்சியினர் தங்களின் கவனக் குவிப்பைச் செய்கையில், ட்ரம்ப் நிர்வாகமும் குடியரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள காங்கிரஸும் ஏழைகளுக்கான அரச திட்டமான மெடிக்கேர் திட்டத்தை துண்டாடும் மற்றும் மில்லியன் கணக்கான அமெரிக்கர்களுக்கான மருத்துவப் பாதுகாப்பை குறைக்கும் அல்லது துடைத்துக் கட்டும் ஒரு பிற்போக்கு நடவடிக்கையான அமெரிக்க சுகாதார பராமரிப்பு சட்டத்தின் இந்தமாதத் தொடக்கத்தின் பாதையை அடுத்து, தங்களது தாக்குதலுடன் மேலும் முன்நோக்கிச் செல்கிறது.




### மக்களின் கோபம் வெடித்திருக்கிறது


நாடு முழுவதிலும் காங்கிரஸ் உறுப்பினர்களுடனான நகரசபை கூட்டங்களில் மக்களின் கோபம் வெடித்திருக்கிறது. உறுதியான வேலைவாய்ப்புடன் உள்ளவர்கள் உட்பட, மில்லியன் கணக்கான மக்கள், அடிப்படைப் பராமரிப்பிற்காக




தொண்டுநிறுவனங்களை அல்லது அவசரவழிகளை நம்பியிருக்கின்றனர். கடந்த மார்ச்சில் ஆயிரக்கணக்கானோர் மேரிலாந்து என்ற இடத்தில் இலவச பல்வைத்தியத்திற்காக, குளிர்நேரத்தில் சூரிய உதயத்திற்கு முன்னரே மருத்துவமனையின் வாசலில் வரிசையில் நின்றனர். இந்தச் சம்பவம் மீதான வொஷிங்டன் போஸ்ட் கட்டுரை, கிட்டத்தட்ட 65 வயதுக்கு மேற்பட்ட அமெரிக்கரில் ஐந்தில் ஒரு பங்கினருக்கு தங்கள் வாயில் ஒற்றை உண்மையான பல் கூட கிடையாது என எழுதியது.

ஓய்வூதியங்கள் தொடர்ந்த தாக்குதலின் கீழ் உள்ளன. வயதான தொழிலாளர்கள் 1962இல் இருந்து அதிக விகிதத்தில் வேலை செய்கின்றனர், பிரதானமாக ஏனெனில் அவர்களால் ஓய்வு ஊதியத்துடன் வாழ முடியாதிருக்கிறது. 55 வயதிற்கு மேலான தொழிலாளர்களில் கால் பங்கிற்கும் அதிகமானோர் 10,000 டொலருக்கும் குறைவாகவே சேமிப்பைக் கொண்டுள்ளனர். டிரக் ஓட்டுநர்கள், நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் ஏனைய தொழிலாளர்களுக்கான பெரிய பன்முக தொழில் வழங்குநர் ஓய்வூதியத் திட்ட நிறுவனம் வீழ்ச்சி நிலையில் உள்ளது.

(தொடரும்...)



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



162

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### நான்காவது கட்ட சுற்றுப் பேச்சு

நானும் எமது குழுவினரும் பேச்சு மண்டபத்தினுள் நுழைந்தபோது, ஒரு சாவு வீட்டுச் சோகத்தில் மூழ்கியவர்கள் போல அரச பிரதிநிதிகளும், அனுசரணையாளர்களும் இருண்ட, வாடிய முகங்களுடன் காணப்பட்டனர். வழமையான புன்முறுவல்களோ, கைலாகு கொடுத்தல்களோ, காலை வணக்க வரவேற்புகளோ அன்று இடம்பெறவில்லை. எம்மைக் கண்டும் காணாதவர்கள் போல, மண்டபத்தில் ஒரு மூலைக்குள் நின்றபடி ஏதோ குசுகுசுத்துப் பேசிக் கொண்டிருந்தனர். எமக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏதோ பாரதூரமான சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என நினைத்தோம். அவர்களுக்கு எதிர்த்தாற் போல, மண்டபத்தின் மற்ற மூலைக்குச் சென்று அங்கிருந்த நாற்காலிகளில் அமர்ந்து கொண்டோம். இரு தரப்புக்கும் உறவறுந்த நிலையில் காலம் கழிந்தது.

சிறிது நேரத்தின் பின்னர், பேராசிரியர் பீரிஸ், சொல்ஹெய்மையும் அழைத்துக் கொண்டு என்னிடம் வந்தார். வழமைக்கு மாறாக, முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டு, முதல்நாள் மாலை பத்திரிகையாளரிடம் நான் தெரிவித்த கருத்துக்கள் உண்மைக்கு மாறானவை என ஆட்சேபம் தெரிவித்தார். நெருக்கடி தணிக்கும் உப - குழு செயலிழந்து செத்துப் போய்விட்டதாக நான் கொடுத்த தவறான தகவல், தான் கூறிய கருத்துக்களுக்கு முற்றிலும் முரணானதாக அமைந்துவிட்டதாக விசனம் தெரிவித்தார். ''என்னை ஒரு பொய்யன் என்று அல்லவா கருதப் போகிறார்கள்.'' - என்று கோபத்துடன் கசப்பான சொற்களை அள்ளி வீசினார் பேராசிரியர். நான் திகைத்துப் போனேன். எப்பொழுதுமே என்னுடன் மிகவும் மரியாதையாக, சிரித்த முகத்துடன் பழகும் ஓர் அன்பான, பண்பான, அடக்கமான மனிதர் இவ்விதம் ஆவேசப்படுகின்றமை எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. இதற்கிடையில் அரச பிரதிநிதிகளும் அனுசரணையாளர்களும் எம்மைச் சூழ்ந்து கொண்டனர். சமாதான அரங்கு ஒரு சண்டைக் களமாக மாறிக் கொண்டது.

''நான் பத்திரிகையாளருக்கு உண்மையைத்தான் எடுத்துச் சொன்னேன். உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக யாழ்ப்பாண இராணுவத் தளபதி விடுத்த கடுமையான, ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனையை அடுத்து, நெருக்கடியைத் தணிக்கும் உப - குழுவிலிருந்து விலகிக் கொள்ள எமது தலைமைப்பீடம் முடிவெடுத்துள்ள இந்தத் தகவலைத்தான் நான் பத்திரிகையாளரிடம் கூறினேன். உங்களைப் புண்படுத்தும்படி நான் எதையும் கூறவில்லை. அத்துடன், நீங்கள் முன்கூட்டியே பத்திரிகையாளருக்குச் செவ்வி வழங்கியமையையோ அதில் என்ன கருத்துக்களைத் தெரிவித்தீர்கள் என்பது பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது.'' - என்று நான் பேராசிரியரைச் சாந்தப்படுத்த முயன்றேன். அந்த நேரத்தில் ஹெல்கிசன் குறுக்கிட்டார். ''உங்களது தலைமைப்பீடத்தின் முடிவுகளை பேச்சு மேசையில் அறிவிக்கின்றமை தான் பொருத்தமான நடைமுறை. அதைவிடுத்து நீங்கள் பத்திரிகையாளர்களிடம் அல்லவா அறிவித்தீர்கள்.'' - என்றார் அவர்.

''நேற்றுப் பேச்சு மேசையில், எமது தலைமையின் முடிவைப் பல தடவைகள் அழுத்தம் திருத்தமாக நான் அறிவித்தபோது நீங்கள் எவருமே அதைப் பாரதூரமானதாக எடுக்கவில்லை. நான் கூறியவற்றிலும் அக்கறை காட்டவில்லை.'' - என்றேன் நான்.

அரச பேச்சுக்குழுத் தலைவரும் சரி, நோர்வே அனுசரணையாளர் குழுத் தலைவரும் சரி, எனது வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. காரசாரமான விவாதம் தொடர்ந்தது. உப - குழுவுக்கு மீண்டும் உயிர் கொடுக்க முனைந்தார் ஹெல்கிசன். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த நான், ''செத்துப் போனதை அடக்கம் செய்வதுதான் பொருத்தமான நடைமுறை'' - என்றேன் கிண்டலாக. சிறிலங்கா இராணுவத்தின் கடும் போக்குக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் நோக்கிலேயே விடுதலைப் புலிகளின் தலைமை இந்தக் குழுவில் இருந்து விலக முடிவு எடுத்தது. - என்றேன். எமது முடிவை மாற்றப் போவதில்லை என உணர்ந்துகொண்டமையை அடுத்து உணர்ச்சி தணிந்து அமைதியடைந்தனர் அரச பிரதிநிதிகள்.

மீண்டும் பேச்சுகள் தொடங்கியபோது, போர் நெருக்கடியைத் தணிக்கும் பிரச்சினை குறித்துப் பேசிய நான், எமது மக்களின் பெரிய மனிதாபிமான தேவைகளுக்கு மேலாக பாதுகாப்பு பிரச்சினைகளுக்கே சிறிலங்கா இராணுவத் தலைமையும், ஜனாதிபதியும் முக்கியத்துவம் கொடுக்கின்றன எனவும் குறிப்பிட்டேன். ''உயர் பாதுகாப்பு வலய விவகாரத்தில் ஏற்க முடியாத நிபந்தனைகளை விதித்ததால் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் மீள் குடியேற்றத்துக்கு இராணுவம் மூடு விழா வைத்து விட்டது.

''எமது மக்கள் தமது சொந்த வீடுகளுக்கு திரும்பிச் செல்ல முடியாத சூழ்நிலையில், உப - குழுக் கூட்டத்தை நடத்துவதில் அர்த்தம் இல்லை. ஆகவேதான், நாம் இந்த உப - குழுவில் இருந்து விலகுவதற்கு முடிவெடுத்தோம். நாம் விலகிக் கொண்டமையால் இந்த உப - குழு செயலிழந்து செத்து விட்டது என்பதுதான் அர்த்தம்.'' - என்று கூறினேன்.

நாம் அந்த உப - குழுவில் இருந்து விலகுவது என தீர்க்கமாக முடிவெடுத்தமை அரச பிரதிநிதிகளுக்கும், நோர்வே அனுசரணையாளர்களுக்கும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. இதுவே, முதற் தடவையாக பேச்சுகளுக்கு ஏற்பட்ட பின்னடைவாகும். இந்த உப - குழு செயற்படாது முடங்கிப்போனதால் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றும் மாபெரும் மனிதாபிமானப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண்பது பெரும் சிக்கலாக எழுந்தது.

உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு தீர்வு காண ஓர் இந்திய இராணுவ நிபுணரின் உதவியை சிறிலங்கா அரசு நாடியுள்ளதாக அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார். இந்த இந்திய இராணுவ நிபுணர் (ஜெனரல் சத்தீஸ் நம்பியார்) சிறிலங்கா படையினரின் பாதுகாப்பு பிரச்சினைகளையும், இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளையும் கருத்தில் எடுத்து, ஒரு திட்டத்தை வரைந்து தருவார் என மொறகொட கூறினார். உயர் பாதுகாப்பு வலய பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்களை குடியேற்றுவதையும், விடுதலைப் புலிகளின் ஆயுதக்களைவையும் தொடர்பு படுத்தி, எந்த நிபுணர்கள் தெரிவிக்கும் யோசனைகளையோ, திட்டங்களையோ விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என அமைச்சர் மொறகொடவுக்குக் கண்டிப்பாகத் தெரிவித்தேன்.

### ஐந்தாம் கட்ட சுற்றுப் பேச்சு



எனது உடல்நிலை காரணமாக எனக்கு ஓய்வு தேவைப்பட்டமையால், நீண்ட பயணத்தையும் நீண்ட பேச்சு நேரத்தையும் குறைத்து, ஜேர்மனியில் போன்னின் நகரில் இரண்டு நாள்களுக்கு 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7,8 ஆம் திகதிகளில் ஐந்தாம் கட்ட சுற்றுப் பேச்சு நடைபெற்றது.

இது இவ்வாறிருக்க, உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமான ஜெனரல் நம்பியாரின் பூர்வாங்க அறிக்கை கொழும்புப் பத்திரிகைகளில் பிரசுரமாகியது. 'விடுதலைப் புலிகள் இயக்கம் தனது கனரக ஆயுதங்களை நடுநிலை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்து, தனது முன்னணி நிலைகளிலிருந்து விலகி, குறிக்கப்பட்ட இடங்களுக்கு பின்நகர்ந்தால் மட்டுமே, உயர் பாதுகாப்பு வலயங்களின் பரப்பு எல்லையை மாற்றி அமைப்பது பற்றிப் பரிசீலிக்கலாம்.' - என நம்பியாரின் மதிப்பாய்வில் தெரிவிக்கப்பட்டது. சிறிலங்கா இராணுவம் ஒருதலைப்பட்சமாக நெருக்கடி தணிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமையை ஜெனரல் நம்பியார் விரும்பவில்லை. தனது இறுதி அறிக்கையில் இந்த விடயத்தை அவர் நன்கு தெளிவுபடுத்துகிறார். ''சிறிலங்கா இராணுவம் உயர் பாதுகாப்பு வலயத்தையோ அன்றி, முன்னணிப் பாதுகாப்பு நிலைகளையோ கலைப்பதாயின், விடுதலைப் புலிகளும் அதே நேரத்தில், தமது இராணுவச் செயற்பாட்டுத் தளங்களைக் கலைக்க வேண்டும்.'' - என்று யோசனை தெரிவித்தார்.

உயர்பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக ஜெனரல் நம்பியார் தெரிவித்த பரிந்துரைகளை விடுதலைப் புலிகள் இயக்கம் நிராகரித்தது. நம்பியாரின் யோசனைகள் குறித்து 'தமிழ் கார்டியன்' பத்திரிகைக்கு நான் வழங்கிய செவ்வியில் கீழ்க்கண்டவாறு தெரிவித்தேன்:-

''அரச படைகளின் பாதுகாப்புக்கு அதீத முக்கியத்துவம் கொடுத்து அகதிகளைக் குடியமர்த்தும் மனிதாபிமானப் பிரச்சினையை, படைச் சமவலு என்ற இராணுவப் பிரச்சினையுடன் தொடர்பு படுத்துகிறார் ஜெனரல் நம்பியார். இந்த யோசனை ஜெனரல் பொன்சேகாவினதும், கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் பூரகோவ்டேயினதும் சர்ச்சைக்குரிய கருத்துக்களுக்கு இசைவாக இருப்பது தெளிவாகத் தெரிகிறது. இடம்பெயர்ந்த மக்களும் அகதிகளும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தமது இல்லங்களுக்குத் திரும்பிச் செல்லும் விவகாரத்தை எமது படைகளுடன் தொடர்புபடுத்தி, வன்னியின் காட்டுப் பாசறைகளுக்குள் முடங்கியிருக்கும் எமது போரணிகளைக் கலைத்து விடும்படி கோருவது மிகவும் அபத்தமானதும் கேலிக்கூத்தானதுமாகும். இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றம் செய்வதற்கு வசதியாகப் படைகளின் பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்வது சிறிலங்கா அரசின் கடமையாகும். தனது கேந்திர, பாதுகாப்பு நிலைவரம் குறித்து, சிறிலங்கா அரசு எந்தவொரு சர்வதேச நிபுணரிடமும் ஆலோசனையைப் பெறுவது பற்றி எமக்கு ஆட்சேபனை யில்லை. ஆனால், அகதிகளை மீள்குடியேற்றம் செய்வ தற்கு விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவை நிபந்தனையாக முன்வைப்பதை நாம் வன்மையாக எதிர்த்தே தீருவோம்.''

(தொடரும்...)

# கிளிநொச்சி அபிவிருத்திக்கு இராணுவமும் நகர அபிவிருத்தி அதிகார சபையும் தடை!

## டிப்போச் சந்தியில் உள்ள இராணுவச் சின்னம் யாருக்காக இருக்கிறது என்றும் சிறிதரன் கேள்வி

கிளிநொச்சி, மே 31

கிளிநொச்சி ஒரு நகரமாக மாற்றமடையாது இருப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையும், இராணுவமும் தடையாக இருக்கின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குற்றம் சாட்டியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது, நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், நகர திட்டமிடல் பற்றி விளக்கமளித்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு கடுமையான குற்றச்சாட்டை சுமத்தினார்.

கிளிநொச்சி டிப்போச் சந்தியில் இருக்கும் இராணுவ நினைவுச் சின்னம் யாருக்காக இருக்கிறது? டிப்போச் சந்தியில் இருக்கும் செங்கல் சுவர்கள் எப்போது அமைக்கப்பட்டன? எங்கிருந்து செங்கற்கள் கொண்டுவரப்பட்டன? 2009 இற்கு முன் நாங்கள் இடம் பெயர்ந்து சென்ற போது அந்த இடத்தில் அப்படி எதுவும் இல்லையே. இது யாருடைய கலாசாரம் என்பதை காட்டுவதற்கு யார் எடுக்கும் முயற்சி. இதற்கு நகர அவிருத்தி அதிகார சபையும் உடந்தையாகஇருக்கிறதா? எனக் கேள்வி எழுப்பினார்.

இந்த நிலையில் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், கிளிநொச்சி டிப்போச் சந்தி இராணுவ நினைவுச் சின்னம் நல்லிணக்கத்துக் குப் பொருத்தமானது இல்லை என்பதால் ஜனாதிபதிக்கு கடி தம் எழுதுவோம் எனத் தெரிவித்தார். இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அது தீர்மானமாகவும் நிறைவேற்றப் பட்டது. (ஐ)

## நீர்கொழும்பு சிறையில் இருந்து நான்கு கைதிகள் தப்பியோட்டம்

நீர்கொழும்பு சிறைச் சாலையில் இருந்து 4 கைதிகள் தப்பியோடியுள்ளனர் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இந்த நான்கு கைதிகளும், சிறைச்சாலை மதிலை துளையிட்டு தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தப்பிச் சென்ற கைதிகளை மீண்டும் கைது செய்ய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)



மன்னார் மறைமாவட்டத்திலுள்ள பருத்திப்பண்ணைக் கிராமத்தில் புனித தோமையார் புதிய ஆலயத்தை மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அபிஷேகம் செய்து வைத்தார். நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 55 இளைஞர், யுவதிகளுக்கு உறுதிப்பூசுதல் நிகழ்வும் இடம்பெற்றது.

பங்குத் தந்தை அருட்பணி டெரன்ஸ் குலாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தலைமன்னார் பங்குத் தந்தை நவரட்ணம், ஆயரின் செயலாளர் அருட்பணி ஆர்.நீக்கிலாஸ், அருட்பணி மரியதாஸ் லியோன், சிறுத்தோப்பு பங்குத் தந்தை அருட்பணி றொனிஸ் வாஸ் அடிகளார்களுடன் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. (ஐ-112)

# வீழ்ந்து நொருங்கிய ஹெலியை மீட்டெடுக்க முடியாத இக்கட்டு

கொழும்பு, மே 31

மீட்பு நடவடிக்கையின் போது, காலி, பத்தேகம பகுதியில் விபத்துக்குள்ளாகிய எம்.ஐ.-17 ஹெலியை மீட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று விமானப் படை தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலை பத்தேகம - இனிமங்கட பகுதியில் உதவிப் பொருள்களை விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஹெலியை அவசரமாகத் தரையிறக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

எனினும், ஹெலியைத் தரையிறக்குவதற்கு அங்கு பொருத்தமான இடம் இருக்கவில்லை. விமானி அனுபவம் மிக்கவராக இருந்தமையால், மரங்கள், வீடு என்பனவற்றுக்கு மத்தியில் அதனைத் தரையிறக்கினார்.

வெள்ளம் வடிந்த பின்னரே நடவடிக்கை



இதன்போது, ஹெலியின் வால் பகுதி வீட்டின் மீது மோதி உடைந்து போனது. மரங்களுக்கிடையில் தரையிறக்கப்பட்டதால், அதன் காற்றாடிகளும் உடைந்து நொருங்கின.

ஹெலியின் முன்பகுதி, வெள்ள நீரிலும், பின்பகுதி மேட்டுப் பாங்கான பகுதியிலும் சிக்கிக்கொண்டன.

தரையிறக்கப்படும் போது ஹெலி பலத்த சேதமடைந்த போதிலும், அதில் பயணித்தவர்கள் பாதுகாப்பாக வெளியேறினர்.

சேதமடைந்த நிலையில் தரையிறக்கப்பட்ட ஹெலியை மீட்க முடியவில்லை. வெள்ளம் சூழ்ந்திருப்பதால், அதனை மீட்க முடியாதுள்ளது. வெள்ளம் வடிந்த பின்னரே அதனை மீட்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வெள்ளத்தால் போக்குவரத்துச் சபைக்கு நாளாந்தம் 2 கோடி ரூபா நஷ்டம்!

கொழும்பு, மே 31

வெள்ளம் காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு இரண்டு கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி முதல் இவ்வாறு நாள்தோறும் இரண்டு கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் கூடுதல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று இலங்கை போக்குவரத்து சபையின் செயற்பாட்டு முகாமையாளர் பீ.எச்.ஆர்.டீ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கலவானை, கொடகவல, இரத்தினபுரி போன்ற டிப்போக்களில் அதிகளவில் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. காலி, மாத்தறை, கம்பஹா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களின் டிப்போக்களின் வருமானத்திலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## வவுனியா தொழில்நுட்ப கல்லூரியில் குறுங்கால கற்கைநெறிகள் ஆரம்பம்

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் குறுங்காலகற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த நிலையில் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று தொழிநுட்ப கல்லூரியின் அதிபர் தெரிவித்தார்.

ஏசி மெக்கானிக், வீட்டுப் பாவனை மின் உபகரணங்கள் திருத்துதல், மோட்டார் சைக்கிள் திருத்துதல், கள உதவியாளர் விவசாயம், கணிய அளவை உதவியாளர், வயரிங் ஆங்கிலம் என்று பல்வேறு கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை வவுனியா தொழிநுட்பக் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-100)

## 'லுலு' சர்வதேச நிறுவனத்தின் வர்த்தக நடவடிக்கை இலங்கையில்

கொழும்பு, மே 31

ஐக்கிய அரபு இராச்சியத்தின் லுலு சர்வதேச நிறுவனம் இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த நிறுவனத்தின் சர்வதேச முகாமைத்துவ பணிப்பாளர் யூசுப் அலி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கையின் சமகால அரசு கடைப்பிடிக்கும் முதலீட்டுக்கான பொருளாதார நடைமுறையால் இலங்கையில் முதலீடு செய்ய விருப்பம் கொண்டுள்ளோம் என்று இதன்போது தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்றுமதிக்கு மேலதிகமாக வர்த்தகம், சுற்றுலாத் தொழிற்துறை, கல்வி மற்றும் சுகாதாரத் துறையிலும் முதலீடு செய்வதற்கு இவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முழுமையான ஒத்துழைப்பை வழங்குகிறார் என்று தெரிவித்துள்ளார். (ஐ)



## மழையால் பாதித்த மக்களுக்கு சிங்கப்பூர், நியூஸிலாந்து உதவி

இலங்கையில் மழை வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக பாதிக் கப்பட்ட மக்களுக்குநிவா ரணங்களை வழங்கும் நோக்கில் சிங்கப்பூர் அரசு ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களையும் நியூ ஸிலாந்து அரசு 3 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதி யான நிவாரணப் பொருள் களையும் உதவியாக வழங்க முன்வந்துள்ளன.

இந்த உதவிகளை வழங்குவது தொடர்பில் சிங்கப்பூர் பிரதமர் லீ ஸீன் லூங் மற்றும் வெளிவிவ கார அமைச்சர் கலாநிதி விவியன்பாலகிருஷ்ணன் ஆகியோர் கடிதங்களை இலங்கை பிரதமர் மற் றும் வெளிவிவகார அமைச் சர்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அனர்த்தம் காரணமாக ஏற்பட்டுள்ள அழிவுகள் கவலையளிப்பதாகத் தெரி வித்துள்ள சிங்கப்பூர் பிர தமர், உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை வெளியிட்டுக் கொள்வதாகக் குறிப்பிட் டுள்ளார். பாதிக்கப்பட்ட மக்கள் விரைவில் தங் களது இயல்பு வாழ்க் கைக்குத் திரும்ப முடியும் என்று நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சீரற்ற வானிலையால் பாதிக் கப்பட்டுள்ள இலங்கைக்கு நியூஸிலாந்து அரசு 3 கோடி 80 லட்சம் ரூபா பெறும தியான நிவாரணப்பொருள் களை பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளது.

செஞ்சிலுவை சங்கத் தின் ஊடாக இந்த நிவா ரண பொருள்களை பெற் றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நியூஸிலாந்து அரசு தெரி வித்துள்ளது. அத்துடன், இலங்கையின் தற்போ தைய நிலை தொடருமாக இருந்தால், எதிர்வரும் நாள்களில் மேலதிக உத விகளை வழங்கும் நடவ டிக்கை எடுக்கப்படும் என்று நியூஸிலாந்து வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ)

# அனர்த்தம் குறித்து அறிந்தபோதும் எந்த ஏற்பாடுகளும் நடக்கவில்லை



### முகாமைத்துவ நிலைய செயற்பாட்டுக்கு திஸ்ஸ விதாரண கண்டனம்

கொழும்பு, மே 31

அனர்த்தம் ஏற்படப் போவதை அறிந்தும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எந்த ஏற்பாடுகளையும் மேற் கொள்ளாமல் இருந்தமை கண்டிக்கத்தக்கது என்று லங்கா சமசமாஜக் கட்சி யின் செயலாளரும் முன் னாள் அமைச்சருமான திஸ்ஸ விதாரண கண்ட னம் தெரிவித்துள்ளார்.

சோசலிச மக்கள் முன் னணி கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத் திய செய்தியாளர் சந்திப் பிலேயே அவர் இவ்வாறு கண்டனம் வெளியிட் டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

அனர்த்தங்கள் ஏற்ப டும் போது அதற்குத் தேவையான அத்தியாவ சிய பொருள்களை களஞ் சியப்படுத்தி வைத்துக் கொள்ளும் பொருட்டே அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அமைக் கப்பட்டது. கடந்த அர சில் நான் விஞ்ஞான தொழிநுட்ப அமைச்ச ராக இருக்கும்போதே இது அமைக்கப்பட்டது.

ஆனால், நாட்டில் தற் போது இடம்பெற்றிருக் கும் சீரற்ற காலநிலை தொடர்பாக வளிமண்டல வியல் திணைக்களம் முன் கூட்டியே எச்ச ரிக்கைவிடுத்தும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அது தொடர்பாக கவன யீனமாகவே இருந்துள்ளது.

வெள்ள அனர்த்தம் ஏற்பட்ட பிரதேசங்களில் தொற்றுநோய்கள் ஏற்ப டுவதற்குச் சாத்தியம் இருக் கின்றது. அதனால் வெள் ளம் வடிந்தோடும் பிரதே சங்களில் தொற்று நோய் கள் ஏற்படாமல் தடுப் பதற்கு சுகாதார அமைச் சர் உடனடியாக நடவ டிக்கை எடுக்க வேண்டும்.

எனவே, அரசு பாதிக்கப் பட்ட மக்களின் சுகாதாரம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண் டும். அத்துடன், தேவை யான வைத்தியர்களை பாதிக்கப்பட்ட பிரதேசங் களுக்கு அனுப்பி வைக் கவும் சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண் டும். - என்றார். (எ)

## விமானப்படைச் சிப்பாய்க்கு ஜனாதிபதி அஞ்சலி



இயற்கை அனர்த்தம் நிலவிய நெலுவ பிரதேசத்தில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த போது விபத்தில் உயிரிழந்த விமானப்படை சிப்பாய் வை.எம்.எஸ்.யாப்பாரத்னவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறுதி அஞ்சலி செலுத்தினார்.

அவரது கிராமமான கொட்டுகொடவுக்கு நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி விஜயம் செய்து இறுதி அஞ்சலி செலுத்தியதுடன் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டார். (எ)

## குழாய் குடிதண்ணீரில் அசுத்தநீர் கலக்கவில்லை

### உறுதியளிக்கின்றார் அமைச்சர் ஹக்கீம்

குழாய்க் குடிதண்ணீ ருடன் அசுத்தமான வெள்ள நீர் கலக்கவில்லை என்று அரசு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தால் குடி தண்ணீரும் பாதிக் கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் மக்கள் மத்தி யில் எழுந்திருக்கும் நிலை யிலேயே, நகரத் திட்ட மிடல் மற்றும் குடிதண் ணீர் விநியோக அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்களின் குடிதண் ணீர்ப் பயன்பாட்டுக்காக விநியோகிக்கப்படும் நீர் சுத்தமாகவே இருக்கின் றது. மண்சரிவால் பாதிக் கப்பட்டுள்ள சில பகுதி களில் குடி தண்ணீர் விநி யோகம் தடைப்பட்டுள் ளது. அந்தப் பகுதிகளில் குடிதண்ணீர் விநியோ கத்தை உடனடியாகச் சீர்செய்ய முடியாத சூழல் காணப்படுகின்றது.

மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதி களில் போதியளவு வெள் ளம் வடிந்த பின் உடன டியாக அந்தப் பகுதியில் உள்ள கிணறுகளைச் சுத்தம் செய்ய நடவ டிக்கை எடுக்கப்படவுள் ளது.-என்றார். (எ)

## இலங்கை அகதி சடலமாக மீட்பு!

தமிழகத்தில் அகதிகள் முகாமில் வசித்து வந்த இலங்கையர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

கரூர் ராயனூர் இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த அந்தோனிராஜ் ஜான்சன் (வயது 21) என்பவரே இவ்வாறு தூக் கிட்ட நிலையில் சடல மாக மீட்கப்பட்டார்.

சுமை தூக்கும் தொழி லாளியான ஜான்சனுக் கும், அதே முகாமைச் சேர்ந்த கிருத்திகா என்ற பெண்ணுக்கு கடந்த 8 மாதங்களுக்கு முன்னர் திருமணம் நடைபெற்றது.

ஜான்சன் மதுப்பழக் கத்துக்கு அடிமையாக இருந்துள்ளார். மதுப்பழக் கத்தைக் கைவிடும்படி கிருத்திகா வற்புறுத்தியுள் ளார். இதனால் விரக்தியில் இருந்த ஜான்சன் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டார். (எ)

## சாமிலா எரியூட்டப்பட்டு கொலையுண்ட சம்பவம்; நீதி கோரி புத்தளத்தில் அமைதிப் பேரணி மகளிர் அமைப்புகளின் ஏற்பாட்டில்!





புத்தளத்தில் கணவ ரால் எரித்துக் கொலை செய்யப்பட்ட சாமிலாவின் மரணத்துக்கு நீதிகோரி புத்தளத்தில் நேற்று முன் தினம் அமைதிப் பேரணி நடைபெற்றது.

பல்வேறு மகளிர் அமைப்புக்கள் ஏற்பாட் டில் இந்த அமைதிப் பேரணி இடம்பெற்றது.

புத்தளம் நகரில் ஆரம் பமான இந்தப் பேரணி புத்தளம் பொலிஸ் நிலை யத்துக்குச் சென்று தொடர்ந்து, அங்கு இது தொடர்பிலான மகஜர் ஒன் றும் பொலிஸ் நிலைய அதிகாரியிடம் கையளிக் கப்பட்டது.

அதன் பின்னர் மீண் டும் பேரணியாக புத்தளம் மாவட்டச் செயலகத்துக் குச் சென்று அரச அதி பருக்கான மகஜரும் கைய ளிக் கப்பட்டதுடன் அமைதிப் பேரணி முடிவடைந்தது.

இந்தப் பேரணியில் ஈடுபட்டவர்கள் தமது வாயைக் கறுப்புத் துணி யினால் கட்டியிருந்த தோடு, பல்வேறு சுலோ கங்கள் கொண்ட மட்டை களை ஏந்தியிருந்தனர்.

எரியூட்டி கொலை செய் யப்பட்ட சாமிலாவின் தாயும் இந்தப் பேரணியில் கலந்து கொண்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

புத்தளம் பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட மதுரங்குளி நல்லாந்தழுவ பகுதியைச் சேர்ந்த 19 வயது டைய முஹம்மது தமீம் சாமிலா என்ற பெண் கடந்த 5 ஆம் திகதி அவரது கண வரால் கட்டி வைத்து தீ மூட்டப்பட்டிருந்தார்.

அதனையடுத்து காய மடைந்த அந்தப் பெண் புத்தளம் தள வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 20 ஆம் திகதி உயிரிழந் தார். இந்நிலையில் தனது மனைவியைத் தீமூட்டி எரித்ததாகக் கூறப்படும் கணவன் தலைமறை வாகிய நிலையில் அவ ரைக் கைது செய்வதற்காக இரண்டு பொலிஸ் குழுக் களை நியமித்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரி வித்தனர். (எ)

## முறையற்ற வகையில் குப்பை கொட்டுவதை கண்காணிக்க ஏற்பாடு

முறையற்ற விதத்தில் குப்பைகளைக் கொட் டும் இடங்கள் மற்றும் குப்பைகள் சேரும் இடங் களைக் கண்காணிப்ப தற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை நடவ டிக்கை எடுத்துள்ளது.

சூழல் பாதிப்புகளை குறைத்துக் கொள்வதற் கான இந்தத் திட்டத்தை இன்று முதல் நடைமுறைப் படுத்தவுள்ள தாக அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் லால் தர்மசிறி குறிப்பிட்டார்.

இதேவேளை, சரிந்து வீழ்ந்த மீதொட்டமுல்ல குப்பை மேடு மற்றும் கண்டி கொஹாகொட குப்பை மேடு தொடர் பாகவும் விசேட கவனம் செலுத்துவதாக சுற்றா டல் அதிகார சபையின் தலைவர் மேலும் குறிப் பிட்டார். (எ)

# அ.தி.மு.க., பா.ஜ.கவின் கைப்பாவை இல்லை!

## தமிழிசை தெரிவிப்பு

அ.தி.மு.க, பா.ஜ.கவின் கைப்பாவை இல்லை என தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தொடர்ச்சியாக அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. தொடர்பில் எந்தவித ஆதாரமும் இல்லாமல் குற்றஞ்சாட்டி வருகிறார். இவ்வாறு கூறுகின்றமை தவறானது. மாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுசெயற்பட்டு வருகிறது. மத்திய அரசு இதற்கு ஒத்துழைப் புத் தருகிறது. அரசியல் உறவு என்பது வேறு. அரசு சார்ந்த உறவு என்பது வேறு.

மத்திய அரசின் மூன்று ஆண்டுகள் நிறைவு வெற்றி அடைந்துள்ளது. சில எதிர்க்கட்சிகள் கூறுகின்றமை போல இந்த அரசு தோல்வி அடையவில்லை. காரணம் இந்த மூன்று ஆண்டுகளில் மத்திய அரசு மீது ஊழல் குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லை. கறுப்புப் பண ஒழிப்புக்கு பின்பு பல மாநிலத் தேர்தல்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது.

இதேவேளை, மாட்டிறைச்சிக்குத் தடை, மாட்டிறைச்சி சாப்பிடுவதற்கு தடை என்று சிலர் கூறுகின்றனர். மத்திய அரசு ஒரு சட்டத்தை இயற்றி உள்ளது. அது விலங்குகளுக்கு பாதுகாப்பு மற்றும் மாட்டு இறைச்சி விற்பனை ஒழுங்குமுறை ஆகும். யாரையும் மாட்டிறைச்சியைச் சாப்பிடக் கூடாது என்று கட்டாயப் படுத்தவில்லை. தடுக்கவும் இல்லை. - என்றார். (ச)

# 'ஜெ' இன் சொத்துக்களை அரசுடைமையாக்க 6 மாவட்ட ஆட்சியர்களுக்கு அவசர உத்தரவு!

## நீதிமன்ற தீர்ப்புக்கு ஏற்ப



மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் தொடர்புடைய சொத்துக்களைக் கையகப் படுத்தும் நடவடிக்கைகளைத் தமிழக அரசு தொடங்கியுள்ளது. இது தொடர்பாகச் சென்னை, காஞ்சிபுரம் உட்பட 6 மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1991-1996 ஆம் ஆண்டு காலகட்டத்தில் வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்தனர் என முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா மற்றும் இளவரசி, சுதாகரன் ஆகியோர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த பெங்களூர் சிறப்பு நீதிமன்றம், 4 பேருக்கும் தலா 4 ஆண்டு தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. மேலும், ஜெயலலிதாவுக்கு 100 கோடி ரூபாவும் மற்றைய 3 பேருக்கும் தலா 10 கோடி ரூபாவும் அப்ராதம் விதித்தது. இந்தத் தீர்ப்பைக் கடந்த பெப்ரவரி மாதம் உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.

இந்நிலையில், வழக்கில் தொடர்புடைய ஜெயலலிதா உட்பட 4 பேருக்கும் சொந்தமான 68 சொத்துக்களைக் கைப்பற்றுமாறு சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உட்பட 6 மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாநில அரசின் உத்தரவின்படி இந்த சொத்துக்களைக் கைப்பற்றும் நடவடிக்கைகளைத் தொடங்குமாறு 6 மாவட்ட ஆட்சியர்களுக்கும், தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்கம் கடிதம் எழுதியுள்ளது. அதன் நகலை மாநில கண்காணிப்பு ஆணையருக்கும் அனுப்பி உள்ளது. இந்த 68 சொத்துகளின் இன்றைய மதிப்பு பல கோடி ரூபா இருக்கும் என்று கண்காணிப்பு இயக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக தமிழக அரசின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்-

நிலம், வீடு உட்பட இந்தச் சொத்துக்களை அடையாளம் கண்ட பிறகு மாவட்ட வருவாய் அதிகாரிகள் அந்தந்த இடங்களில், 'இது தமிழக அரசுக்கு சொந்தமானது' என்று அறிவிப்புப் பலகைகளை வைப்பார்கள்.

சொத்துக்குவிப்பு வழக்கு தொடர்பாக கைப்பற்றப்பட்ட இந்தச் சொத்துக்கள் தொடர்பாக எந்தவித பரிமாற்றத்தையும் அனுமதிக்கக் கூடாது என்று பத்திரப்பதிவுத் துறை அதிகாரிகளுக்கு மாநில அரசு உத்தரவு பிறப்பிக்கும்.-என்றார். (ச)

# பாபர் மசூதி வழக்கில் அத்வானிக்கு பிணை!

டில்லி, மே 31

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் முன்னாள் துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி, பா.ஜ.கவின் மூத்த தலைவர்களான முரளி மனோகர் ஜோஷி மற்றும் உமா பாரதி உட்பட ஒன்பது பேருக்குக் குற்றப் புலனாய்வு சிறப்பு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலேயே இவர்களுக்கு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

அத்வானி உள்ளிட்டோர் விசாரணைக்கு நேரில் ஆஜராக விலக்களிக்க கோரி மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு கடந்த 25 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போது மேற்படி மனுவை நிராகரித்து அவர்களை நேரில் ஆஜராகுமாறு உத்தரவிடப் பட்டது. அதன்படி மேற்படி தலைவர்கள் நேற்று நேரில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# குண்டர் தடுப்புச் சட்டத்தை வைத்துக்கொண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு ஆப்பு!

## வழக்குகளை ரத்துச் செய்யுமாறு வலியுறுத்துகின்றார் வைகோ



மே 17 இயக்கத்தின் திருமுருகன் காந்தி உட்பட 4 பேர் மீது குண்டர் சட்டம் பாய்ந்துள்ளமை கண்டனத்துக்குரியதாகும். குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் போடப்பட்ட வழக்குகளைத் தமிழக அரசு உடனே ரத்து செய்து, ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க முன்வர வேண்டும். -இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

2009 ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்காலில் லட்சக் கணக்கான தமிழர்களை இலங்கை அரசு ஈவிரக்கம் இன்றிப் படுகொலை செய்தது. படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்காக ஆண்டுதோறும் அமைதி வழியில் நினைவேந்தல் நிகழ்ச்சி மெரினா கடற்கரையில் மே 17 இயக்கம் நடத்தி வந்தது. வழக்கம் போலவே, இந்த ஆண்டும் மே 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மெரினா கடற்கரையில் அத்தகைய நினைவேந்தல் நிகழ்ச்சியை நடத்த முயன்றபோது, தமிழகப் பொலிஸ் தடுத்தது. அமைதி வழியில் நடத்த முயன்ற இலங்கைத் தமிழ் உணர்வாளர்களைப் பொலிஸார் தாக்கினர். மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி உட்பட ஏழு பேரும், தமிழர் விடியல் கட்சியைச் சேர்ந்த 9 பேரும், காஞ்சி மக்கள் மன்றத்தைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டு, புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில், மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி , தமிழர் விடியல் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் டைசன், மற்றும் மாநில ஒருங்கிணைப்பாளர் இளமாறன் மற்றும் அருண்குமார் உள்ளிட்ட நால்வர் மீதும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பொய் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்திய அரசியல் சட்டம் உறுதி அளித்துள்ள பேச்சு உரிமை, கூட்டம் கூடும் உரிமை ஆகிய அடிப்படை உரிமைகளை நசுக்க இன்றைய தமிழக அரசு பொலிஸாரைப் பயன்படுத்துகின்றமை விபரீத நடவடிக்கை ஆகும்.

தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட இலங்கையில்கூட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்ச்சி இந்த ஆண்டு நடைபெற்றது. ஆனால் தாய்த் தமிழகத்தில் அத்தகைய நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு பொலிஸார் அனுமதிக்காதமை உலகத் தமிழர்களின் பார்வையில் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைமையைத் தமிழகத்துக்கு ஏற்படுத்திவிட்டது- என்றுள்ளது. (ச)

# நடிகை சோப்ராவுக்கு 'தாதா சாகேப் பால்கே' விருது !



பிரபல நடிகை பிரியங்கா சோப்ராவுக்கு 'தாதா சாகேப் பால்கே' விருது வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

திரை வானில் தன்னிகரற்ற சேவையாற்றி வரும் கலைஞர்களுக்கு ஆண்டு தோறும் தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்தியத் திரை உலகினருக்குக் கிடைக்கும் கௌரவச் சின்னமாகவும், வாழ்நாள் அங்கீகாரமாகவும் இந்த விருது கருதப்படுகிறது.

சத்யஜித் ரே, பிருத்விராஜ் கபூர், நாகிரெட்டி, எல்.வி.பிரசாத், ராஜ்கபூர், லதா மங்கேஷ்கர், சிவாஜி கணேசன், கே.பாலசந்தர் உள்ளிட்ட திரையுலக ஜாம்பவான்கள் பலரின் புகழுக்கு தாதா சாகேப் விருது அணி சேர்த்துள்ளது. 2016 ஆம் ஆண்டுக்கான தாதா சாகேப் பால்கே விருது சர்வதேச அளவில் புகழ்பெற்ற பல திரைப் படங்களை இயக்கிய கே.விஸ்வநாத்துக்கு கிடைத்தது. இந்நிலையில் இந்த வருடம் முதல் சர்வதேச அளவில் புகழ்பெற்ற நடிகை என்கிற புதிய பிரிவு இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தாதா சாகேப் பால்கே அக்கடமி விருதுக் குழுவின் தலைவர் கணேஷ் ஜெயின் கூறுகையில்-

பிரியங்கா சோப்ரா தனது கடின உழைப்பால் சர்வதேசத் தளத்தில் அறியப்பட்டுள்ளார். இந்தியா சார்பாக உலக அளவில் அவர் நடிப்புத்திறமையை வெளிப்படுத்தி வருகிறார். - என்றார்.

இந்த விருதை மும்பையில் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள விழாவில் பிரியங்கா சோப்ரா பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வரி விதிப்புக்கு எதிராக தமிழகத்தில் ஒரு லட்சம் உணவகங்கள் பூட்டு!



உணவுப் பொருள்கள் மீதான வரி விதிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழகத்தில் மாத்திரம் சுமார் ஒரு லட்சம் உணவகங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை மூடப்பட்டுள்ளன என உணவக உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

தமிழகம் மட்டுமன்றி ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா, புதுச்சேரி ஆகிய தென் மாநிலங்களிலும் மேற்படி ஒருநாள் கடையடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சாதாரண உணவகங்களில் வழங்கப்படும் உணவுப் பொருள்களுக்கு 2 சதவீத வரியும், குளிரூட்டப்பட்ட வசதி உள்ள உணவகங்களில் 2 சதவீத வற் வரியும் மற்றும் 6 சதவீத சேவை வரியும் விதிக்கப்பட்டிருந்தது. இந்த வரி விதிப்பை 12 மற்றும் 18 சதவீதங்களால் உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த எதிர்ப்புப் போராட்டம் வெடித்துள்ளது. (ச)

# ‘மோரா’ தாக்கியது பங்களாதேஷை! 10 லட்சம் மக்கள் வெளியேற்றம்!!

## காற்றில் பறந்தன கூரைகள்; வேரோடு சாய்ந்தன மரங்கள்





டாக்கா, மே 31

வங்கக் கடலில் உருவான ‘மோரா’ புயல் நேற்றுக் காலை பங்களாதேஷை கடுமையாக தாக்கித் தூக்கியது. இதனால் 10 லட்சம் மக்கள் வெளியேற்றப் பட்டனர்.

வங்க கடலில் உருவான ‘மோரா’ புயல் சின்னம் கொல்கத் தாவுக்கு தெற்கு- தென்கிழக்கே 750கி.மீற்றரிலும், பங்களாதேஷின் சிட்டகாங்குக்கு தெற்கு- தென் மேற்கே 640 கி.மீற்றர் தூரத்திலும் நேற்றுமுன்தினம் மையம் கொண் டிருந்தது.

இது மேலும் வலுவடைந்து புயலாக உருமாறியது. இந்த நிலையில் நேற்றுக் காலை 6 மணிக்கு பங்களா தேஷில் காஸ் பசாருக்கும் சிட்டகாங் குக்கும் இடையே கரையைக் கடந்தது.

அப்போது மணிக்கு 117 கி.மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசியது. இடியுடன் கூடிய பலத்த மழை கொட் டியது. பலத்த காற்று வீசியதால் ஆயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன; வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்தன.

மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. தகவல் தொடர்பும் பாதிக்கப்பட்டது. இதனால் மக்கள் கடும் அவதிக்கு ஆளாகினர்.

பலத்த மழை பெய்து வருவதால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

புயல் தாக்குவதற்கு முன்பே முன் எச்சரிக்கை நடவடிக்கையாக கடற்கரையோரம் தாழ்வான பகுதியில் தங்கியிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

மொத்தம் 10 லட்சம் மக்கள் வெளி யேற்றப்பட்டு அரசு அமைத்துள்ள பாதுகாப்பு இடங்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவை யான உணவு, மருந்து உள்ளிட்ட அத்தி யாவசியப் பொருள்கள் விநியோகிக்கப் பட்டு வருகின்றன. மீட்புப் பணியில் பொலிஸாரும், இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

புயல் தாக்குதலால் ஏற்பட்ட சேத விவரங்கள் தொடர்பான தகவல்கள் எவையும் இதுவரை வெளியாகவில்லை.

---

# உடன்படிக்கை இல்லாமல் வெளியேறுவதற்குத் தயார்

## இவ்வாறு கூறுகிறார் பிரிட்டன் பிரதமர் மே



லண்டன், மே 31

ஐரோப்பிய ஒன்றியத்தால் முன்வைக்கப்படும் பிரெக் சிற் உடன்படிக்கை திருப்தி கரமாக இல்லாத பட்சத்தில் உடன்படிக்கையின், வெளி யேற பிரிட்டன் தயாராக இருக் கிறது என பிரதமர் தெரேசா மே தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் அளித்த செவ்வியின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஐரோப்பிய ஒன்றியத்துடன் சிறந்த உடன்படிக்கை ஒன்றை உருவாக்கவே நாம் விரும்பு கின்றோம். இருப்பினும், என் னைப் பொறுத்தவரையில் பொருத்தமற்ற உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதை விட உடன்படிக்கை ஒன்று இல்லா மல் விலகுவது மேல். அவ்வாறு உடன்படிக்கை இல்லாமல் வெளியேறுவதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்.- என்றார்.

இதேவேளை, தனக்கு அதி காரம் கிடைக்கும் பட்சத் தில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் சிறந்த உடன்படிக்கை ஒன்று கட்டாயம் ஏற்படுத்தப்படும் என்று பிரிட்டன் தொழிற்கட் சித் தலைவர் ஜெரமி கோர்பின் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (எ)

---

# ஐ.எஸ். தீவிரவாதிகளைவிட மிகவும் ஆபத்தானவர் புடின்

## சாடுகிறார் அமெரிக்க செனட்டர் மெக்கெய்ன்



ரஷ்ய ஜனாதிபதி புடின் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தை விட ஆபத்தானவர் என்று அமெரிக்காவின் செனட்டின் ஆயுதச் சேவை கள் குழுவின் தலைவரான ஜோன் மெக்கெயின் கடுமையாகச் சாடியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யா வின் தலை யீடு இருப்பதாகக் கூறப்படுகிறது. ரஷ்யா, அமெரிக்காவுக்கு மிகப் பெரிய அச் சுறுத்தலாக மாறிவருகிறது.

விரைவில் ரஷ்யாவுக்கு எதிராக பொருளா தாரத் தடையைக் கொண்டு வருவோம், உல கப் பாதுகாப்புக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறார்.

ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தை விட புடின் ஆபத்தானவர்.-என்றார்.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம் புக்கு எதிராக பல்வேறு கருத்துக்களை ஜோன் ஏற்கனவே கூறியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. (எ)

---

# ஈராக்கில் கார்க் குண்டுத் தாக்குதல்: அப்பாவிகள் 13 பேர் உடல் சிதறிப் பலி

## ஐஸ்கிறீம் விற்பனை நிலையத்தில் கொடூரம்



பக்தாத், மே 31

ஈராக்கில் ஐஸ்கிறீம் விற் பனை நிலையம் ஒன்றில் வெடி குண்டுகள் நிரப்பப் பட்ட கார் மோதியதில் 13 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

ஈராக்கில் ஐ.எஸ். தீவிர வாதிகளுக்கும் இராணுவத் துக்குமான மோதல் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. தீவிரவாதிகள் முகாம்கள் மீது ஈராக் இராணுவமும் அமெ ரிக்க கூட்டுப் படைகளும் இணைந்து குண்டு மழை பொழிந்து வருகின்றன. இரா ணுவத் தாக்குதல் மற்றும் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு அப்பாவி பொது மக்கள் நூற் றுக் கணக்கானோர் இதுவரை உயிரிழந்தனர்.

ஏராளமானோர் கை, கால் களை இழந்து மருத்துவ மனைகளில் சிகிச்சைப்பெற்று வருகின்றனர்.

இந்தநிலையில் தலைநகர் பக்தாத்தில் உள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் ஒன்றின் வாகனங்கள் நிறுத்தும் பகுதி யில் வெடி குண்டுகள் நிரப்பப் பட்ட கார் நிறுத்தப்பட்டிருந்தது.

அந்தக் கார் திடீரென வெடித்துச் சிதறியதில் ஐஸ் கிறீம் விற்பனை நிலையத்தில் இருந்த அப்பாவிப் பொது மக் கள் 13 பேர் சம்பவ இடத்தி லேயே உடல் சிதறி உயிரிழந் தனர். இந்தக் கொலை வெறித் தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிர வாத அமைப்பு பொறுப்பேற் றுள்ளது.

இதுதொடர்பில் டுவிட் டரில் தெரிவித்துள்ள அவர்கள், ‘ஐ.எஸ். தீவிரவாதிகள் இன்று இரவு குழந்தைகள், குடும்பங் கள் கூடும் ஐஸ்கிறீம் விற்பனை நிலையத்தை குறி வைத்துள் ளனர். நாங்கள் ஈராக்குக்கு எதிரானவர்கள்’ என்று தெரிவித் துள்ளனர். (எ)

---

# பிலிப்பைன்ஸில் தொடரும் மோதல் வெளியேற்றப்படுகின்றனர் மக்கள்

ஐ.எஸ். தீவிரவாதிகளுக் கும், பிலிப்பைன்ஸ் படையி னருக்கும் இடையில் நடை பெற்று வரும் கடும் மோதல் காரணமாக பொதுமக்கள் வேறு பகுதிகளுக்கு வெளி யேற்றப்பட்டு வரும் நிலை யில், பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எட்டாவது நாளாகவும் நேற்று மோதல்கள் தொடர்ந்து வரும் நிலையிலேயே பொதுமக்கள் அங்கிருந்து வெளியேற்றப் பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸின் மராவி நகரில் தொடரும் இந்த மோத லால் இதுவரை குறைந்தது 84 ஆயிரம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட் டுள்ளனர். அத்துடன் மோதலில் சிக்கி அப்பாவி பொதுமக்கள் 100 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

அந்தப் பகுதியில் இராணு வச் சட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ள போதிலும், அப் பாவி பொதுமக்கள் 2 ஆயிரம் பேர் ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் சிக்கியுள்ளனர் என்று தகவல் கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், ஐ.எஸ். தீவிர வாதிகளை அழிக்கும்பொருட்டு பிலிப்பைன்ஸ் படையினர் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தி வருகின்றார்கள். அத்துடன், ஹெலி மற்றும் கவச வாகனங் களையும் அவர்கள் பயன் படுத்தி வருகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

# 4 ஆவது முறையாக மெஸ்ஸியிடம் 'கோல்டன் ஷூ'!



ஸ்பெயின், மே 31

ஐரோப்பிய உதைபந்து கிளப்புகளில் விளையாடிய வீரர்களில் அதிக கோல்கள் அடித்து மெஸ்ஸி 4 ஆவது முறையாக கோல்டன் ஷூவை தங்கச் சப்பாத்தைப் பெற்றுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் அந்தந்த நாடுகளில் உள்ள உதைபந்து கழக அணிகளுக்கு இடையே உதைபந்தாட்டத் தொடர் நடைபெற்று வருகிறது.

ஸ்பெயின் நாட்டில் உள்ள கழகங்களுக்கு இடையே 'லா லிகா' தொடர் நடைபெறுகிறது. பிரான்ஸ் நாட்டில் உள்ள கழகங்களுக்கிடையே 'லீக் 1' நடைபெறுகிறது. இதேபோன்று இத்தாலி, ஜேர்மனி போன்ற நாடுகளிலும் தொடர் நடைபெற்று வருகிறது.


இந்தத் தொடர்களில் அதிக கோல்கள் அடித்த வீரருக்கு 'ஐரோப்பியன் கோல்டன் ஷூ' வழங்கப்படும்.

அதன்படி 'லா லிகா'வில் மெஸ்ஸி 37 கோல்கள் அடித் துள்ளார். இதன்மூலம் 74 புள்ளிகள் பெற்று கோல்டன் ஷூவை 4 ஆவது முறை யாகப் பெற்றுள்ளார்.

இதற்கு முன் கிறிஸ்டியானோ ரொனால்டோ நான்கு முறை இந்த ஷூவைப் பெற்றிருந்தார். மெஸ்சி தற்போது ரொனால்டோவின் சாதனையை சமன் செய்துள்ளார்.

போர்த்துக்கல் கழக அணியான ஸ்போர்ட்டிங் லிஸ்பனில் விளையாடும் பாஸ் டோஸ்ட் 68 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். கிறிஸ்டியானோ ரொனால்டோ 50 புள்ளிகளுடன் 13 ஆவது இடத்தில் உள்ளார்.

# ஒரு நாள் போட்டிகளில் ஹசிம் அம்லா சாதனை!



வெல்ஸ், மே 31

தென்னாபிரிக்க அணியின் ஓட்டக் குவிப்பு இயந்திரம் என்னும் சிறப்புப் பெயர் மூலம் அழைக்கப்படும் நட்சத்திர துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ஹசிம் அம்லா, ஒரு நாள் போட்டிகளில் அதிவிரைவாக 7,000 ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற சாதனையை பதிவுசெய்துள்ளார்.

இதற்கு முன்னர், இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த இச்சாதனையை நேற்று முன்தினம் கிரிக்கெட்டின் தாயகமான லோர்ட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து அணிக்கெதிராக நடைபெற்ற மூன்றாவது ஒரு நாள் போட்டியில் அம்லா தகர்த்திருந்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியின் போது, தனது 150 ஆவது ஒரு நாள் இன்னிங்ஸை விளையாடியிருந்த (153 ஆவது போட்டிகள்) அம்லா, அப்போட்டியில் 23 ஓட்டங்களை கடந்திருந்த நிலையில் தனது 7,000 ஆவது ஒரு நாள் ஓட்டத்தைப் பூர்த்தி செய்திருந்தார்.

இச்சாதனையை இதற்கு முன்னர் நிலை நாட்டியிருந்த விராட் கோஹ்லி அதற்காக 161 இன்னிங்ஸுகளை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அம்லா ஏற்கனவே ஒரு நாள் போட்டிகளில் அதிகுறைந்த இன்னிங்ஸ் களில் 2 ஆயிரம் ஓட்டங்கள் (40 இன்னிங்ஸ்கள்), 3 ஆயிரம் ஓட்டங்கள் (57 இன்னிங்ஸ்கள்), 4 ஆயிரம் ஓட்டங்கள் (81 இன்னிங்ஸ்கள்), 5 ஆயிரம் ஓட்டங்கள் (101 இன்னிங்ஸ்கள்) மற்றும் 6 ஆயிரம் ஓட்டங்கள் (123 இன்னிங்ஸ்கள்) பெற்ற வீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து அணிக்கு எதிரான நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில், மொத்தமாக 55 ஓட்டங்களை ஹசிம் அம்லா குவித்திருந்தார். இப்போட்டியில் தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்களால் இங்கிலாந்து அணியை வீழ்த்தி இலகு வெற்றியைப் பெற்றிருந்தது.

# மெஸ்ஸியை விட ரொனால்டோ சிறந்த வீரர்!

## பிரேசில் அணியின் முன்னாள் ஜாம்பவான் ரொனால்டோ கூறுகிறார்






மட்ரிட், மே 31

இந்த சீசனில் (2016 ஆம் ஆண்டு -2017 ஆம் ஆண்டு வரை) மெஸ்ஸியை விட கிறிஸ்டியானோ ரொனால்டோ சிறந்த வீரர் என்று பிரேசில் அணியின் முன்னாள் ஜாம்பவான் ரொனால்டோ கூறியுள்ளார்.

ஸ்பெயின் நாட்டின் முன்னணி உதைபந்து கழக அணிகளான பார்சி லோனா, ரியல் மட்ரிட் அணிகளுக்காக கிறிஸ்டியானோ ரொனால்டோ, மெஸ்ஸி ஆகியோர் விளையாடி வருகின்றனர்.

ரொனால்டோ ரியல் மாட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார். மெஸ்ஸி பார்சிலோனா அணிக்காக விளையாடி வருகிறார்.

ரொனால்டோவின் சிறப்பான ஆட்டத்தால் ரியல் மட்ரிட் 'லா லிகா' சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டிக்குத் தகுதிப் பெற்றுள்ளது.

இந்த சீசனில் கிறிஸ்டியானோ ரொனால்டோ 45 போட்டிகளில் 40 கோல்கள் அடித்துள்ளார். 12 கோல்கள் அடிக்க உதவி புரிந்துள்ளார்.

அதேவேளை, மெஸ்ஸி 52 போட்டிகளில் 54 கோல்கள் அடித்துள்ளார். 19 கோல்கள் அடிக்க உதவி புரிந்துள்ளார்.

இந்த நிலையிலேயே, கிறிஸ்டியானோ ரொனால்டோதான் சிறந்த வீரர் என்று பிரேசில் அணியின் முன்னாள் ஜாம்பவான் ரொனால்டோ கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''இந்த வருடத்தில் நான் கட்டாயம் கிறிஸ்டியானோ ரொனால்டோவைத்தான் தேர்வு செய்வேன். கடந்த இரண்டு வருடங்களில் சிறப்பாக விளையாடியுள்ளார். அவரது புள்ளி விவரத்தை புறந்தள்ளிவிட முடியாது.

மெஸ்ஸி தனது காலால் பந்தை கடத்திச் செல்வதை நான் விரும்பிப் பார்ப்பேன். இரு வீரர்களும் சிறப்பான வர்கள். அவர்களை ஒப்பிடுவது மிகக்கடினம். இருவரும் மரியாதைக்கு தகுதியானவர்கள்'' என்றும் அவர் கூறியுள்ளார்.

# மீண்டும் குத்துச்சண்டையில் களம் இறங்குகிறார் மேரிகோம்!



டில்லி, மே 31

மங்கோலியாவில் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடங்கும் சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் ஓர் ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் மேரிகோம் கலந்துகொள்கிறார்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற உலக குத்துச் சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் 2 ஆவது சுற்றில் தோல்வி கண்டு ஒலிம்பிக் தகுதி வாய்ப்பை மேரிகோம் இழந்தார்.

5 முறை உலக சம்பியனான மரிகோம் அதன் பின்னர் எந்தப் போட்டியிலும் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில், ஓர் ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் மங்கோலியாவில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் மேரிகோம் கலந்து கொள்ளவுள்ளார்.

இது குறித்து மேரிகோம் கருத்துத் தெரிவிக்கையில்- 'நவம்பர் மாதம் நடைபெறும் ஆசிய சம்பியன் ஷிப் போட்டியில் 48 கிலோ உடல் எடைப் பிரிவில் கலந்துகொள்ளத் தயாரானாலும், இந்தப் போட்டியில் 51 கிலோ உடல் எடைப்பிரிவில் பங்கேற்க இருக்கிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

# போதையில் வாகனத்தைச் செலுத்திய 'கொல்ப்' வீரர் டைகர் வுட்ஸ் கைது!

நியூயோர்க், மே 31

அமெரிக்காவின் பிரபல கொல்ப் வீரர் டைகர் வுட்ஸ் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய குற்றச் சாட்டுக்காக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட டைகர் வுட்ஸ், மேலதிக விசாரணைகளுக்கு ஒத்துழைப்பேன் என்று எழுத்து மூலம் அறிவித்தமையால் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும் தான் மது போதையில் வாகனத்தைச் செலுத்தவில்லையென்றும், தனக்கு நோய் காரணிக்காக கொடுக்கப்பட்ட மாத்திரைகளை உட்கொண்ட போது என்னை அறியாத மாற்றம் ஏற்பட்டது என்றும் டைகர் வுட்ஸ் அறிக்கை விடுத்துள்ளார்.

டைகர் வுட்ஸ் கடந்த சில நாள்களுக்கு முன்னர் நோய் காரணியொன்றுக்காக சத்திர சிகிச்சை செய்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வட்டுக்கோட்டை மண் தந்த சமூக சேவையாளர் பாலராமன்



, தன்னை மட்டுமன்றி பிறர் நலனிலும் அக்கறை கொண்டு பிறரையும் நேசித்த நல்ல மனிதர் நடராஜா பாலராமன் அவர்கள் அமரரானார் என்ற செய்தி எமது இதயங்களைக் கனக்க வைக்கின்றது. பழகுவதற்கு மிகவும் இனிமையான மனிதர். எல் லோரிலும் அன்பு செலுத்தி அவரவர் தேவை அறிந்து, தானே முன்வந்து உதவும் இயல்பு உடையவர். ஆடம்பரமற்று எளிமையாக வாழ்ந்தவர். ஆன்மீக நாட்டமும் இறைபக்தியும் மிக்கவர். தன் வாழ்க்கைக் காலத்தை எல்லோருக்கும் பயன்படக் கூடியதாக அமைத்துக் கொண்டவர்.

இலங்கை வங்கியில் மிக நீண்டகாலம் அர்ப்பணிப்புடன் பணியாற்றி ஓய்வுபெற்றவர். வெள்ளவத்தை இலங்கை வங்கிக் கிளையின் ஓர் அடையாளமாகத் திகழ்ந்தவர் அமரர் பாலராமன் என்றால் மிகையில்லை. வெள்ளவத்தைக் கிளையில் வங்கி முகாமையாளராக வீபூதிக் குறியுடனும் சந்தனப் பொட்டுடனும் பணியாற்றி பல்வேறு பட்ட தேவைகளுடனும் வரும் தமிழ் பேசும் சமூகத்தினரின் தேவைகளை நிறைவேற்ற அன்புடன் உதவி இணையிலாப் பணிசெய்த பெருமகன். எப்பொழுதும் துடிப்புடனும் செயல் நேர்த்தியுடனும் செயலாற்றும் செயல்வீரர். வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் துடிப்பு மிக்கதொரு உறுப்பினராகக் கடைசிவரை உழைத்தவர்.

பிறர் துன்பம் கண்டு மனமிரங்கி உதவுவதற்குஅமரர் எப்பொழுதும் பின்னின்றவர் அல்லர். வன்னிப் பெருநிலப்பரப் பில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனது சொந்தப் பணத்தை வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தின் ஊடாக வழங்கி உதவியவர். கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றின் வேண்டுகோளை ஏற்றுத் தனது சொந்த நிதியில் கிணறு ஒன்றை வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தின் ஊடாக அமைத்துக்கொடுத்தார். இதனை முன்மாதிரியாகக் கொண்டே வட்டு இந்துவாலிபர் சங்கம் இதுவரை பல கிணறுகளை வன்னி மாவட்டத்தில் தேவையுள்ள மக்களுக்கு பல அன்பர்களின் உதவியுடன் அமைத்துக் கொடுத்துள்ளது.

தனது சொந்த ஊரான வட்டுக் கோட்டை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டவராகச் செயற்பட்டார். குறிப்பாக ஆங்கில அறிவை மாணவர்கள் மத்தியில் வளர்க்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து வட்டுக் கோட் டையில் ஆங்கில வகுப்புக்களை வட்டு.மத்திய கல்லூரியில் நடத்த உதவினார். ஊரிலும் கொழும்பிலும் இந்து தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு இவர் பல்வேறு உதவிகளைச் செய்துள்ளார்.

வட்டுக்கோட்டை இந்து வாலி பர் சங்கத்தினரின் செயற்பாடு களுக்குப் பலவழிகளிலும் உதவியவர் அமரர் பாலராமன் ஆவார். வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தின் கிளையொன்றைக் கொழும்பில் நிறுவுவதற்காக உழைத்து அக்கிளையின் ஸ்தாபகத் தலைவராகச் செயற்பட்டார். வெளிநாடுகளில் வாழும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அன்பர்களை ஆற்றுப்படுத்தி வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தினரின் செயற்பாடுகளை வலுப்படுத்த உதவினார். வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தினர் திருமணமண்டபம் ஒன்றை அமைத்ததில் அமரர் பாலராமனினதும் கொழும்புக் கிளையினதும் பங்களிப்பு கணிசமானது.


வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவரான அமரர் பாலராமன் அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையில் நீண்ட காலமாகப் பொருளாளராகவும் தற்போது உபதலைவராகவும் செயற்பட்டு வந்தவர். கல்லூரியின் வளர்ச்சிக்கும் கல்லூரி மாணவர்கள் பலரின் கல்வி வளர்ச்சிக்கும் கொழும்புக் கிளை உதவ தனது உழைப்பையும் நல்கியவர்.

அத்துடன் வட்டு. மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் நிர்வாகக் குழு உறுப்பினராகச் செயற்பட்டார்.

அமரர் ந.பாலராமனின் இழப்பு அவரது குடும்பத்தினர் நண்பர்களுக்கு மட்டுமன்றி வட்டுக்கோட்டை மக்கள் உள்ளிட்ட பலரிற்கும் பேரிழப்பாகும். சமூக சிந்தனையுடைய இனிய நல்ல மனிதரை இழந்துள் ளோம். இவ்விழப்பு நிச்சயம் ஈடு செய்ய முடியாததாகும். அன்னாரின் ஆத்மா அமைதி பெறட்டும்.

- சு.திருஞானசம்பந்தர்.
முன்னாள் வதிவிடப் பிரநிதி, ஐ.நா. சபை, - வட்டு இந்து வாலிபர் சங்கக் கொழும்புக் கிளை உறுப்பினர்)

# கும்ளேவுக்கு எதிராக புகார்: இந்திய அணியில் குழப்பம்!



லண்டன், மே 31

பயிற்சியாளர் கும்ளே அளவுக்கு அதிகமாக கண்டிப்பு காட்டுகிறார் என இந்திய வீரர்கள் புகார் கூறியுள்ளனர். இதனால், தான் பி.சி.சி.ஐ. புதிய பயிற்சியாளரை தேடுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்க இந்திய அணி இங்கிலாந்து சென்றுள்ளது. எதிர்வரும் வரும் 4 ஆம் திகதி பாகிஸ்தானை சந்திக்க முழு வேகத்தில் தயாராகி வருகிறது.

இந்த நேரத்தில், புதிய பயிற்சியாளர் தேடல் குறித்து இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) அறிவிப்பு வெளியிட்டுள்ளது. கும்ளே அதிக சம்பளம் கேட்டதால்தான் இப்படிச் செய்கின்றனர் என கூறப்பட்டது.

உண்மையில், இந்திய வீரர்கள் மற்றும் பயிற்சியாளர் கும்ளே இடையிலான உறவில் விரிசல் விழுந்த விவரம் இப்போது தெரியவந்துள்ளது.

இவரது கண்டிப்பான பயிற்சி முறைகளால் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட வீரர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

'டிரசிங் ரூமில்" வீரர்களுக்கு சுதந்திரம் கொடுப்பது கிடையாதாம். ஆணவமாக நடந்து கொள்வாராம். இதனால், வீரர்கள் தங்களது கருத்தை இயல்பாகத் தெரிவிக்க முடியவில்லை.

**வீரர்கள் புகார்:**

இதுகுறித்து இந்திய கிரிக்கெட்டை நிர்வகிக்கும் (சி.ஒ.ஏ.) குழுவிடம், வீரர்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து புதிய பயிற்சியாளர் குறித்து வெளிப்படையாக அறிவிப்பு வெளியானது.

**வெற்றி அதிகம்:**

கும்ளேயின் ஒப்பந்த காலம் சம்பியன்ஸ் கிண்ணத்துடன் முடிகிறது. இவரது பயிற்சியில் குறை ஒன்றும் இல்லை. கடந்த ஓர் ஆண்டில் இந்திய அணி இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற அணிகளை வென்றது. 13 டெஸ்ட் போட்டிகளில் ஒரு தோல்வியைத்தான் சந்தித்தது.

இருப்பினும், இதெல்லாம் சொந்தமண்ணில் தான் கிடைத்தது. அந்நிய மண்ணில் அல்ல என வீரர்கள் கூறுகின்றனர். இப்படி அதிருப்தி அதிகமாக இருப்பதால் பயிற்சியாளராக கும்ளே நீடிப்பது கடினம் தான்.

இதேவேளை, கடந்த 2007 ஆம் ஆண்டு இந்திய அணி பயிற்சியாளராக இருந்தவர் கிரெக் சாப்பல். இவரது அணுகுமுறை வீரர்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது. அத்துடன், அப்போதைய அணித் தலைவர் கங்குலிக்கும், சாப்பலுக்கும் இடையே பொது இடத்தில் மோதல் வெடித்தது.

இதனையடுத்து, சச்சின், ஷாகிர்கான், ஹர்பஜன் உள்ளிட்டோர், பி.சி.சி.ஐயிடம் நேரடியாக முறையிட்டனர். இப்படி பல்வேறு அதிருப்தி நிலவியதால், 2007 ஆம் ஆண்டு உலக கோப்பைத் தொடரில் இந்தியா சாதிக்க முடியவில்லை.

இதே போன்ற நிலை தற்போது இல்லை. ஏனெனில் கும்ளே எல்லோராலும் மதிக்கப்படக் கூடியவர். பல வீரர்களுக்கு ஆலோசகராக உள்ளார்.

இருப்பினும் இவரது பயிற்சியாளர் பதவி தொடர்பான சர்ச்சை இந்திய வெற்றிக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்பதே ரசிகர்களின் பிரார்த்தனையாக உள்ளது.

இதற்கிடையே ராகுல் டிராவிட்டை பயிற்சியாளராக நியமிக்க திட்டமிட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது. பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிக்குமாறு அவர் கேட்டுகொள்ளப் பட்டுள்ளார். ஆனால் டிராவிட் இது குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

**இந்தியா - பாக். போட்டி நடக்குமா?**

இதேவேளை, இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடர் நடைபெற வாய்ப்பு இல்லை என மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் விஜய் கோயல் தெரிவித்துள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்கு பின் இந்தியா - பாகிஸ்தான் இடையிலான உறவு மோசமடைந்தது. இரு அணிகளும் ஐ.சி.சி. நடத்தும் தொடர்களில் மட்டும் மோதிக் கொண்டன. இரு அணிகளுக்கும் இடையிலான தொடர் எங்கும் நடக்கவே இல்லை. மீண்டும் தொடரை நடத்துவது குறித்துப் பேச்சுகள் நடந்தன. ஆனால், எதிர்ப்புக் கிளம்பியது.

இதுகுறித்து இந்திய மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் விஜய் கோயல் கூறுகையில்-

''பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் பங்கேற்க வேண்டும் என முடிவெடுக்கும் முன்பு இந்திய கிரிக்கெட் சபை மத்திய அரசிடம் பேச வேண்டும்.

எல்லை தாண்டிய பயங்கரவாதம் நீடிக்கும் பட்சத்தில், இரு அணிகள் பங்கேற்கும் தொடரை நடத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை என, இதற்கு முன்பே தெளிவாகக் கூறியுள்ளேன்'' என்று தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பிரச்சினைகள் இந்திய அணிக்குள் தலைதூக்கியுள்ளமை ரசிகர்களை ஏமாற்றமடையச் செய்துள்ளது.

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இச் சுவீகரிப்பு நடவடிக்களை நிறுத்தி, மக்களுடைய காணிகளை முழுமையாக விடுவிக்கச் செய்வதற்கு அரசாங்கத்துடன் பேச்சு நடத்தவும் மேற்படி கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய கூட்டத்தில் மீள்குடியேற்றம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இதன்போது வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலர் வலி.வடக்கில் இராணுவத்தால் ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ள மக்களுடைய காணிகளை விடுவிக்கமாறு வலியுறுத்தினர்.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புத் தொடர்பாகவும் பலர் கருத்துக்களை வெளியிட்டனர்.

இதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட இணைத்தலைவர் மாவை சேனாதிராஜா வலி.வடக்கில் உள்ள மக்களுடைய காணிகளை இராணுவம் விடுவிக்க வேண்டும் என்று இக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது என்றார்.

மயிலிட்டிப் பகுதி இன்னும் இரண்டு மாதங்களுக்குள் விடுவிக்கப்பட்டு, அதில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள்.

பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக விஸ்தரிப்பதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்காக மேலதிகமாக மக்களுடைய காணிகளைச் சுவீகரிக்க வேண்டியதில்லை என்று ஆராய்வுகளில் இருந்து தெரியவந்திருந்தது.

கடந்த கூட்டத்தில் விமான நிலைய விஸ்தரிப்பிற்காக மக்களுடைய காணிகள் சுவீகரிக்கப்படக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இருப்பினும், மேலதிக காணிகளைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகச் சொல்லப்படுகின்றது.

இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே, பலாலி விமான நிலைய விஸ்தரிப்பிற்காக மேலதிகமாக மக்களுடைய காணிகளைச் சுவீகரிப்பதற்காக வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தை நிராகரிக்குமாறு இக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது நடமுறைப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்கப்படும்.

மேலும், இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள மக்களுடைய காணிகளை விடுவிப்பது தொடர்பில் வடமாகாண முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண அமைச்சர்கள், சபை உறுப்பினர்கள் ஆகியோர் கூடி அரசாங்கத்துடன் பேசி, சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் மாவை. சேனாதிராஜா மேலும் தெரிவித்தார்.

## அனர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்தும் உள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள மக்கள் பாதுகாப்பான 383 மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

மேலும், 6 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அனர்த்த நிலைமையால் 15 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என இடர் முகாமைத்துவ நிலையம் நேற்றுமாலை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 1402 வீடுகள் முழுமையாகவும், 7 ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.(உ)

## அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மல் ஆக்கப்பட்டிருக்கின்றனர். இந்நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே என அரசாங்கத்திடம் மட்டும் கேட் பதில் என்ன நியாயம் இருக்கின்றது?'

– இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே.

யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று மாலை தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

மேற்படி ஊடகவியலாள்ளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக பரணகம ஆணைக்குழு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகியன விசாரணைகளை மேற்கொண்டிருந்தன.

அவர்களுடைய விசாரணைகளின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் தாங்கள் பிள்ளைகளை படையினர், புலிகள், வேறு ஆயுத குழுக்கள் மற்றும் இந்திய அமைதிப்படையினர் போன்றோர் கடத்திச்சென்றனர் எனக்கூறியிருக்கின்றனர்.

தற்போது, புலிகளின் தலைவர்கள், மற்றைய இயக்கங்களின் தலைவர்கள் என எவரும் உயிருடன் இல்லை. இந்நிலையிலேயே அனைவரும் அரசாங்கத்திடம் மட்டும் தமது உறவினர்களைக் கேட்கின்றனர். அது நியாயமற்றது.

இந்த அரசாங்கம் கடந்தகால அரசாங்கங்களைப்போல் இளைஞர்களை மறைத்து வைத்துக் கொண்டு பொய் கூறவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்கவே மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதன் ஊடாக அவர்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படவுள்ளது. இதற்காக ஜனாதிபதி குழு ஒன்றை உருவாக்கவும் தீர்மானித்திருக்கின்றார்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தென்னிலங்கையிலும் நடைபெற்றிருந்தன. ஆனால் என்ன செய்வது?

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என அவர்களுடைய உறவினர்கள் நம்புகிறார்கள். அதில் தவறில்லை. ஆனால் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. அரசாங்கத்திற்கும் அது தெரியாது.

இன்று பிரபாகரன் இல்லை, சூசை இல்லை. இந்நிலையில் காணாமற்போனவர்களை யாரிடம் போய்க்கேட்பது? ஜனாதிபதியைச் சந்தித்தால் இதே பதிலையே அவரும் கூறுவார். இதையே சொல்லவும் முடியும். – என்றார். (ம)

## இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான மாவை சேனாதிராசா நேற்றைய இணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் படையினர் வசம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் குறித்து அரசுடனும், பிரதமருடனும் பல விடயங்கள் பேசியுள்ளோம்.

இதற்கமைய எதிர்வரும் இரண்டு மாத காலத்திற்குள் வலி. வடக்கில் படையினர் ஆக்கிரமிப்பில் இருக்கின்ற மயிலிட்டிப் பிரதேசம் விடுவிக்கப்படுமென்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கம் எங்களுடன் பேசி முடிவுகளை எடுத்தாலும் அவற்றில் பல நடைமுறைப்படுத்தப்படுவதேயில்லை என்ற கவலையையும் மாவை சேனாதிராசா அச்சமயம் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இராணு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தீர்மானத்தை வடமாகாணக்கல்வி அமைச்சு ஊடாக சகல பாடசாலைகள் மற்றும் கல்விப்பணிப்பாளருக்கும் அனுப்பி, உடனடியாக அதனை நடமுறைப்படுத்தவும் முடிவு எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் –

கடந்த 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இராணுவம் முன்னெடுத்த தொடர்ச்சியான நிகழ்ச்சியில் யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை மாணவ, மாணவிகள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். – என்றார்.

இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவிகள் பலர் இராணுவ வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டார்கள்.

இவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். பாடசாலை மாணவிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் இராணுவ நிகழ்வுகளுக்குள் உள்ளீர்ப்பது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இதற்கான அனுமதியை வடமாகாணக் கல்வி அமைச்சு வழங்கியதா, வழங்கவில்லையா என்று தெரியவில்லை. எதுவாக இருந்தாலும், இனிவரும் காலங்களில் மாணவர்கள் இவ்வாறான நிகழ்வுகளுக்க அழைத்துச் செல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும். – என்றார்.

இதற்குப் பதிலளித்த வட மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா இவ்வாறு மாணவர்கள் இராணுவநிகழ்வுகளுக்கு அழைத்துச்செல்லப்பட்டமை தொடர்பாகத் தனக்கு ஒன்றும் தெரியாது என்றார்.

இருப்பினும்; இனிவரும் காலங்களில் வடமாகாண கல்வி அமைச்சின் அனுமதி இல்லாமல் எந்த ஒரு நிகழ்வுக்கும் மாணவர்களை அழைத்துச் செல்லாதவாறு பாடசாலை அதிபர் மற்றும் கல்வி பணிப்பாளருக்கு அறிவித்தல் வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

## அமைச்சர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக் கூட்டத்தின்போது உத்தரவிட்டுள்ளார்.

வெள்ள அனர்த்தச் சூழலை நாடு எதிர்கொள்ளும் சமயத்தில் இந்த வாகனக் கொள்வனவு வேண்டாம் என சில அமைச்சர்கள் முன்வைத்த யோசனையை ஏற்றே வாகனக்கொள்வனவை இந்த வருடம் மேற்கொள்ள வேண்டாம் என்ற உத்தவை ஜனாதிபதி விடுத்தார். (உ)

## நீதிமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் பிரசன்னமாவார் என அவருடன் தொடர்புடைய சில வட்டாரங்கள் கொழும்பில் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

வேறு விவகாரங்கள் தொடர்பாக அவரைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் தேடி வரும் நிலையிலேயே, இன்று அவர் மேன்முறையிட்டு நீதிமன்ற வழக்குக்கு ஆஜராவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாரால் கைது செய்யப்படாமல் நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்காக நேரடியாக நீதிமன்ற உத்தரவின் பேரில் நீதிமன்றத்தில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்படுவதையே ஞானசார தேரர் விரும்பக்கூடும் என ஒரு தகவல் தெரிவித்தது.

இன வெறுப்புப் பேச்சுகள் மூலம் இனங்களுக்கிடையேயான ஒற்றுமையைக் குலைக்க முயற்சி செய்தமை உள்ளிட்ட சில குற்றச்சாட்டுக்களின் பேரிலேயே ஞானசாரதேரரிடம் வாக்குமூலம் பெறுவதற்காக பொலிஸார் அவரைத் தேடி வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

ஞானசார தேரர் தனது சுய பாதுகாப்புக்காகவே தலைமறைவாக இருக்கிறார் எனப் பொதுபல சேனாவின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்குழுவின் இணைத்தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகிய இருவரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

அவசர கோலத்தில் நடந்தேறியது அக்கூட்டம்.

நேற்றுக் காலை 10 மணிக்குக் கூட்டம் ஆரம்பமாகியது. இதன்போது மறைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் இறுதிச் சடங்கு நிகழ்வு நடைபெறுவதால் கூட்டம் இரண்டு மணித்தியாலங்கள் நடைபெற்று நண்பகல் பன்னிரண்டு மணியுடன் கூட்டம் ஒத்திவைக்கப்படுமென்று இணைத் தலைவர்களில் ஒருவரான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கூட்டத்திற்கெனத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களில் உள்ள விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படாது, நிகழ்ச்சி நிரலில் உள்வாங்கப்படாத விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்ததன் பின்னர் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, நீர் விநியோகம், வீடமைப்பு, உள்ளூராட்சி சபைகள், வர்த்தகம், நகர அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் எவை குறித்தும் ஆராயப்படவில்லை.

அத்தோடு கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் கருத்துக்கள் தெரிவிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அவர்கள் தமது பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் கருத்துக்களை முன்வைப்பதற்கு முனைந்தபோதும் இணைத்தலைவர்களால் அதற்கான உரிய அனுமதி வழங்கப்படவில்லை.

அனுமதி வழங்கிய சந்தர்ப்பங்களிலும் அவர்கள் தமது கருத்துக்களை உரிய முறையில் தெரிவிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

இதனால் கூட்டத்திற்கு வந்திருந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் தமது கடும் மனவருத்தத்தை வெளியிட்டனர். (உ)

## விநாயகமூர்த்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திக் கிரியைகள் நேற்று கொக்குவிலில் நடைபெற்றன.

பெருந்திரளான பொதுமக்களும் அரசியல்தலைவர்களும் அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

நேற்று முன்தினம் கொழும்பில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட அவரது பூதவுடல் நேற்றுக் காலை சாவகச்சேரியிலும் பின்னர் கொக்குவிலில் அவரது இல்லத்திலும் வைக்கப்பட்டது.

நேற்றுக் காலை அவரது பூதவுடல் கொக்குவில் இல்லத்துக்கு எடுத்து வரப்பட்டபோது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அங்கு பிரசன்னமாகி அஞ்சலி செலுத்தினார்.

மதியம் எம்.பி. சுமந்திரன் தலைமையில் அஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

கலாநிதி ஆறு. திருமுருகன், நீதிபதி எம். இளஞ்செழியன், எம்.பிக்களான மாவை சேனாதிராஜா, த.சித்தார்த்தன் மற்றும் என்.ஸ்ரீகாந்தா, சுரேஷ் பிரேமச்சந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண அமைச்சருமான துரைராஜசிங்கம், வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே உட்படப் பலர் உரையாற்றினர்.

நேற்று மாலை கொக்குவில் இந்து மயானத்தில் அவரது பூதவுடல் தீயுடன் சங்கமமானது. (உ)

## சீனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமதியான உதவிப் பொருள்களை வழங்குவதாக சீனா அறிவித்திருந்தது. வாடகை விமானம் ஒன்றில் இந்த உதவிப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படும் என்று சீனா கூறியிருந்த போதிலும், மூன்று கப்பல்களில் உதவிப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவை கொழும்பு நோக்கி வந்து கொண்டிருக்கின்றன.

உதவிப்பொருள்களை ஏற்றிக் கொண்டு மூன்றாவது இந்தியக் கடற்படைக்கப்பல் நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந் தடைந்தது. மூன்று கப்பல்களில் இந்தியா உதவிப்பொருள்களை அனுப்பியிருந்தது. 'ஐ.என்.எஸ். கிரிச்' கடந்த சனிக்கிழமையும் 'ஜஎன்எஸ் சர்துல்' ஞாயிற்றுக்கிழமையும் கொழும்புத்துறைமுகத்தைவந்தடைந்திருந்தன. இந்நிலையில் நேற்று மூன்றாவதுகப்பலான 'ஐ.என்.எஸ். ஜலஸ்லா' வந்து சேர்ந்தது.

அவசர உதவிப் பொருள்களுடன் பாகிஸ்தான் கடற்படைக் கப்பல் நேற்றுக் கொழும்புத்துறைகத்தை வந்தடைந்துள்ளது. 'பிஎன்.எஸ்.சுல்பிகார்' என்ற கப்பலிலேயே உதவிப் பொருள்கள் கொழும்புக்கு வந்து சேர்ந்தன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இஸ்ரேலும் அவசர உதவிப் பொருள்களை வழங்கியுள்ளது. வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவை நேற்றுச் சந்தித்த இஸ்ரேலியத் தூதுவர் டானியல் கார்மன் இந்த உதவிப் பொருள்களைக் கையளித்தார். மின்பிறப்பாக்கிகள், குடிதண்ணீர், விளக்குகள் உள்ளிட்ட உதவிப் பொருள்களை இஸ்ரேல் வழங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிங்கப்பூர் ஒன்றரை லட்சம் டொலர் பெறுமதியான உதவிப்பொருள்களையும், ஆஸ்திரேலியா 5 லட்சம் டொலர் பெறுமதியான உதவிப் பொருள்களையும் வழங்குகின்றன என அறிவித்துள்ளன. இவற்றில் மீட்புப் பணிகளுக்குத் தேவைப்படும் மிதவைப் படகுகள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்கள் என்பனவும் அடங்கியுள்ளன.

## நாவற்குழியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தவழக்கைக்கொண்டுநடத்துவதற்கான உதவிகளைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடமாகாண சபை வழாங்கவும் அக்கூட்டத்தில் உறுதி எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் யாழ்.நாவற்குழி சிங்களக் குடியேற்றப் பகுதியில் புதிதாக தாதுகோபுரம் நிர்மாணிக்கப்படவுள்ளமை தொடர்பில் பேசப்பட்டது.

இதன் போது கருத்து வெளியிட்ட வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா, இந்தப் பணிகளை நிறுத்துவதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரினார்.

அண்மையில் உரிய அனுமதி பெற்றுக் கொள்ளாமல் அமைக்கப்பட்ட பிள்ளையார் மற்றும் வைரவர் ஆலயங்களின் கட்டங்களை இடிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பிள்ளையாருக்கும், வைரவருக்கும் ஒரு சட்டமாக இருந்தால் அந்தச் சட்டம் புத்தருக்கும் உரியதாகும்.

எனவே, சாவகச்சேரிப் பிரதேச சபை சட்டத்திற்கு முரணான வகையில் இந்த நாவற்குழி சிங்கள குடியேற்றப் பகுதியில் தாது கோபுரம் அமைப்பதற்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய வேண்டும். சாவகச்சேரிப் பிரதேச செயலாளர் மற்றும் அரசாங்க அதிபருடன் கலந்தாலோசனை செய்து இந்த வழக்கைத்தாக்கல் செய்ய வேண்டும். – என்றார் அவர்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட இணைத்தலைவர் மாவை சேனாதிராஜா, பிரதேச சபையினால் தாக்கல் செய்யப்படும் வழக்கைக் கொண்டு நடத்துவதற்கான உதவிகளைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண முதலமைச்சர் மற்றும் வடமாகாண சபையைச் சேர்ந்தவர்கள் வழங்குவார்கள் என்றார்.

# இந்த நாட்டைச் சேர்ந்தவன் என தமிழனைக் கருதவில்லை அரசு!

## சாந்தி எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா, மே 31

தமிழனையும் இந்த நாட்டவன். தன்னுடைய நாட்டைச் சேர்ந்தவன் எனக் கருதாது இந்த அரசு செயற்பட்டு வருகிறது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

நிலமீட்பு தொடர்பில் மக்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்:-

மக்களுடைய அடிப்படை உரிமைகளை மதிக்காத நிலையாக அல்லது மனிதாபிமான



மற்ற ஒரு செயற்பாடாகத்தான் அரசின் செயற்பாட்டைப் பார்க்கின்றேன்.

ஏன் என்று சொன்னால் இறுதி யுத்தத்தில் இந்த அரசால் அள்ளிச் செல்லப்பட்ட நகைகளையோ, வாகனங்களையோ அல்லது தங்களது பெறுமதியான சொத்துக்களையோ கேட்டு இந்த மக்கள் ஆர்ப்பாட்டம் செய்யவில்லை.

அசையாதச் சொத்தாகவும், தமது வாழிடமாகவும் உள்ள தங்களது காணிக்காகத்தான் போராடுகிறார்கள். அவர்களிடம் ஆவணம் உள்ள காணியைத்தான் கேட்கிறார்கள்.

தமிழனையும் இந்த நாட்டவன், தன்னுடைய நாட்டைச் சேர்ந்தவன் எனக் கருதாது இந்த அரசு செயற்பட்டு வருகிறது. இது நல்லிணக்கத்துக்கு ஏற்புடையது அல்ல.

தென்பகுதியில் குப்பை மேடு சரிந்தவுடன் இந்த அரசு விரைந்து செயற்பட்டு அதற்குரிய பரிகாரங்களை தேடிக் கொண்டது. நிவாரணம் கொடுப்பது முதல் விசேட நாடாளுமன்ற அமர்வை நடத்துவது என சகல நடவடிக்கைகளையும் எடுத்தது.

ஆனால், இதைவிட மோசமாக 30 வருட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களை பாராமுகமாக இருப்பது மிகவும் வேதனையான விடயம்.-என்றார்.

(ஐ-100)

## ஊடக நிறுவன அதிபர் பேர்சி குணசேன காலமானார்

இலங்கையின் ஊடகத் துறையில் கொடிகட்டிப் பறந்த சுயாதீனபத்திரிகாசமாஜத்தின் இயக்குநர்களில் ஒருவரான பேர்சி குணசேன தமது 84 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

அவரின் சகோதரர்களான சேபால குணசேன, சரத் குணசேன, ஆனந்தா குணசேன ஆகியோர் ஒன்றிணைந்து தவச, தினபதி, சண் ஆகிய காலைத் தினசரிகளையும், சவச, தந்தி ஆகிய மாலை நேரப் பத்திரிகைகளையும் வெளியிட்டனர்.

அதே வழியில், ரிவிரெச, சிந்தாமணி, வீக்கென்ட், த ஸ்டார் ஆகிய வாராந்த மும்மொழிப் பத்திரிகைகளையும் வெளியிட்டனர். இவர்களின் தந்தை எம்.டி குணசேனா, பிரபல புத்தகசாலை ஒன்றை நிறுவியவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## இலங்கையில் ஒரு நாளில் மட்டும் ஒரு கோடி 10லட்சம் சிகரெட் புகைப்பு

கொழும்பு, மே 31

இலங்கையில் நாள் ஒன்றுக்கு ஒரு கோடி 10 லட்சம் சிகரெட்டுகள் புகைக்கப்படுகின்றன எனறு புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் தலைவர் டாக்டர் பாலித அபேகோன் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

இலங்கையில் புகையிலை மற்றும் சிகரெட் பயன்பாட்டால் ஆண்டு தோறும் 20 ஆயிரம் பேர் வரையில் உயிரிழக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழப்போரில் 10 வீதமானவர்கள் புகைப்பிடிப்பவர்களுக்கு அருகில் உள்ளவர்களாவர்.

சுமார் ஐந்து லட்சம் பேர் சிகரெட் புகைப்பிடிக்கின்றார்கள். ஒருவர் அதிகளவில் சிகரெட் புகைப்பதால் நாள் ஒன்றுக்கு ஒரு கோடி 10 லட்சம் சிகரெட்டுக்கள் புகைக்கின்றார்கள். புகைப்பிடிப்போரை அந்தப் பழக்கத்திலிருந்து முற்றுமுழுதாக விடுவிப்பது பெரும் சிரமமான காரியம்.-என்றார்.

(ஐ)

## இந்திய குழுவினரின் வைத்திய முகாம் களுத்துறையில்!



இந்திய கடற்படைக்குட்பட்ட சர்துல் கப்பலில் வருகைதந்த வைத்திய குழுவினர் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கமைவாக களுத்துறை மாவட்டத்தில் புளத்சிங்கள பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வைத்திய சிகிச்சைகளை மேற்கொண்டனர்.

புளத்சிங்கள தியகடுவ பாடசாலையில் இந்தச் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இதில் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த வைத்தியக் குழுவைச் சேர்ந்த இருவர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கண்ணீருக்கு பதில் கிட்டுவது எப்போது?

## சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளர் சந்திரகுமார் கேள்வி

கிளிநொச்சி, மே 31

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தங்களுடைய உறவுகளைத் தேடித் தருமாறு கேட்டு கிளிநொச்சியில் ஆரம்பித்த போராட்டம் தீர்வேதுமில்லாத நிலையிலே நேற்று 100 ஆவது நாளை எட்டியது.

தங்களுடைய நியாயமான பிரச்சினைக்கு, நிச்சயமாக ஒரு தீர்வு கிட்டும், காணாமலாக்கப்பட்ட தங்களின் உறவுகளைப் பற்றிய செய்திகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இந்தப் போராட்டத்தை மக்கள் ஆரம்பித்திருந்தனர்.

ஆனால், அந்த நம்பிக்கை 100 நாள்களில் இழக்கப்பட்டுள்ளது. இதனால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலைக்கு இந்த மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே, பாதிக்கப்பட்டுத் துயரால் வருந்திக் கொண்டிருந்த மக்கள், தாங்கள் நடத்திய இந்த நீண்ட போராட்டத்துக்குச் சாதகமான பதில் கிட்டவில்லை என்பது இரட்டைப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இந்த மக்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு, இனியும் காலதாமதங்களைச் செய்யாமல் உடனடியாக உரிய தீர்வை முன்வைக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

-இவ்வாறு சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் அமைப்பாளர் முருகேஸ் சந்திரகுமார் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தற்போதைய ஆட்சியானது மிகக்கூடுதலான ஜனநாயக அடித்தளத்தைக் கொண்டது எனவும் பாதிக்கப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறையுள்ளது என்றும் கூறப்படுவதைக் கருத்தில் கொண்டே, இந்த நெடிய போராட்டத்தை நம்பிக்கையோடு இந்த மக்கள் நடத்தி வருகின்றனர்.

தீர்வு கிட்டும் என்று எதிர்பார்த்திருக்கும் மக்களுக்குக் குறைந்த பட்சம், நம்பிக்கை அளிக்கக் கூடிய ஆரம்பகட்ட நடவடிக்கைகளையாவது அரசு எடுத்திருக்க வேண்டும். அதற்கான அழுத்தங்களை நாடாளுமன்றத்திலும் வெளிச் சூழலிலும் ஏற்படுத்தியிருக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு ஆதரவை அளித்துவரும் சக்திகளுக்கு உண்டு.

இந்தச் சக்திகள் முறையாகச் செயற்பட்டிருக்குமானால், இன்று இந்த மக்கள் 100 நாள்களைக் கடந்தும் எத்தகைய தீர்வும் இல்லாத நிலையில் இந்தத் தகரக் கொட்டகையினுள் மழையிலும் வெயிலிலும் சோர்ந்திருக்க வேண்டியிருந்திருக்காது.

குறைந்தபட்சம் இந்த மக்களை ஜனாதிபதியும் பிரதமரும் சந்தித்தித்துப் பேசுவதற்கான ஏற்பாட்டையாவது இந்தச் சக்திகள் செய்திருக்க வேண்டும். அதற்கான தார்மீகப் பொறுப்பு இவற்றுக்குண்டு.

தனிப்பட்ட ரீதியிலான அரசியல் தேவைகளுக்காக நேரம் ஒதுக்கி, தங்கள் வீடுகளுக்கு ஜனாதிபதியையும் பிரதமரையும் அழைக்கும் அக்கறையை ஏன் இந்த மக்களின் பாற்பட்டு இந்தச் சக்திகள் எடுக்கவில்லை.

வலிகளைச் சுமந்து கொண்டிருக்கும் மக்களுக்கு தீர்வே மகத்தான மருந்தாகும். அந்த மக்களைத் தொடர்ந்தும் வலிகளில் துவள விடுவதில்லை. இது பொதுவிதிக்கும் மருத்துவ முறைக்கும் உரியதல்ல.

ஆகவே, இனியும் தாமதங்களை நீட்டிச் செல்லாமல், இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கான முயற்சியை சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் மேற்கொள்ள வேண்டும். பிரச்சினைகளை வைத்திருப்பதையும் வளர்ப்பதையும் விட்டு விட்டு, அவற்றைத் தீர்த்துப் புதியதொரு சூழலை உருவாக்குவதற்கு முயற்சிப்போம்.

இந்த நாடு கண்ணீருடன் வாழ்கின்ற மக்களைக் கொண்டிருக்க வேண்டாம் என்று உறுதி செய்வோம். உறவுகளை இழப்பதும் உறவுகள் எங்கே என்று தெரியாமல் தவிப்பதும் ஒரு நாட்டுக்கு ஏற்படும் மிகக் கொடியதொரு நிலையாகும். இதற்குக் காரணமான அரசியல் சூழல் முடிவுக்கு வந்ததைப் போல இந்தப் பிரச்சினையும் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளோடு இணைந்து அவர்கள் நடத்தும் போராட்டங்களுக்கு எமது ஆதரவையும் பங்களிப்பையும் தொடர்ந்தும் நாம் வழங்குவதற்கு எப்போதும் தயாராக இருக்கிறோம். கண்ணீரைத் துடைப்பதே மகத்தான அரசியல் பணியாகும் என்ற அடிப்படையில் தொடர்ந்தும் எமது ஆதரவும் பங்களிப்பும் என்றும் உண்டு. மிகக் கூடிய விரைவில் எல்லோரும் கூடிய மகிழ்ச்சியான ஒரு தருணம் வரும் என்ற நம்பிக்கையோடு இந்தப் போராட்டத்துக்கு ஆதரவளிப்போம்.-என்றுள்ளது. (ஐ-70)




காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளைக் கண்டறிய வேண்டி தொடர்ந்து நூறு நாள்களாக கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தி வந்த மக்கள் நேற்று 'ஏ9' வீதியில் குந்து மறியல் போராட்டம் நடத்திய போது.....!





யாழ்ப்பாணம் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்:- என்.நிதர்ஷன்)

3 மாணவிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம்

## மூதூர் பிரதேசத்தில் நேற்று பாடசாலைகளில் பகிஷ்கரிப்பு

மூதூரில் சிறுமியரான மூன்று பாடசாலை மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டனர் என கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்து, அப்பிரதேசத்தில் உள்ள சுமார் 10 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படும் வரை பாடசாலைகளுக்குச் செல்ல மாட்டோம் எனத் தெரிவித்தே இந்தப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதனால், மூதூரிலுள்ள சுமார் 10 பாடசாலைகள் நேற்று இயங்கவில்லை. மாணவர்கள் பாடசாலைகளுக்கு வருகை தராமையால், பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கையை முன்னெடுக்க முடியவில்லை என ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தப் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவத்தைக் கண்டித்து ஆலங்கேணி மகா வித்தியாலய மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவம் தொடர்பில் மூதூர் நகரில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட 4 பேரும் நேற்று நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்களை இன்று வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (உ)

## பஸ்களின் 'ஓட்டப் போட்டி'; சிக்கிய 'ஹைஏஸ்' சிதைந்தது!

### புங்குடுதீவில் நேற்றுமுன்தினம் சம்பவம்

புங்குடுதீவு, மே 31

புங்குடுதீவில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை இ.போ.ச பஸ் - தனியார் போக்குவரத்து பஸ்களின் 'ஓட்டப் போட்டி' யில் சிக்கிக் கொண்டது 'ஹைஏஸ்' வாகனம்.

இந்த விபத்தில் ஹைஏஸ் வாகனம் பெரும் சேதமடைந்தது. சாரதி காயமடைந்தார். தெய்வாதீனமாக அவருக்கு பெரும் ஆபத்து ஏதும் ஏற்படவில்லை.

புங்குடுதீவு பெருங்காடு கந்த சுவாமி கோயிலுக்கு முன்பாக -பெரிய வளைவில் வைத்து இந்த விபத்து நடந்ததாக அதனை நேரில் கண்டவர் தெரிவித்தார்.

இ.போ.ச. பஸ்ஸை தனியார் பஸ் வளைவில் வைத்து முந்திச் செல்ல முற்பட்ட போதே 'இந்த மோதல்' நடந்தது என்றும் 'ஹைஏஸ்' பலத்த சேதமடைந்த நிலையில் அதன் சாரதி இழுத்து வெளியில் எடுக்கப்பட்டார் என்றும் வாகனத்தில் இருந்த ஏனையோருக்கு தெய்வாதீனமாக எதுவும் நேரவில்லை என்றும் பயணி ஒருவர் தெரிவித்தார்.

விபத்தில் சிக்கிய இ.போ.ச., தனியார் பஸ்ஸுக்கும் சேதங்கள் ஏற்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார். (இ

## கதிர்காமத்துக்கு பாத யாத்திரை சந்நிதியிலிருந்து சனி ஆரம்பம்

வடமராட்சி, மே 31

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து வருடா வருடம் இடம்பெறும் கதிர்காமத்துக்கான பாதயாத்திரை எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமையில் இருந்து புறப்படவுள்ளது.

வழமைபோன்று மட்டக்களப்பு - காரைதீவைச் சேர்ந்த வேல்சாமி மகேந்திரன் தலைமையில் இந்தப் பாதயாத்திரைக் குழு, கதிர்காமம் நோக்கி புறப்படும்.

572 கிலோ மீற்றர் தொலைவைக் கொண்ட இந்த யாத்திரை, 52 நாள்களில் கதிர்காமத்தில் பூர்த்தியுறும். சந்நிதியில் இருந்து புறப்படும் யாத்திரைக் குழுவினர், புத்தூர், கொடிகாமம், பரந்தன், முல்லைத்தீவு ஊடாக கிழக்குச் சென்று திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை வழியாக கதிர்காமத்தைச் சென்றடைவர்.

பாத யாத்திரையில் பங்குபற்றும் அடியார்கள் இரு பாலரும் காவி உடை தரித்திருக்க வேண்டும் என்று ஏற்பாட்டாளர் வேல்சாமி மகேந்திரன் தெரிவித்துள்ளார். இவர் காரைதீவில் இருந்து வருகை தந்து தற்போது செல்வச் சந்நிதி ஆச்சிரமத்தில் தங்கியுள்ளார்.

கதிர்காமம் உற்சவம் எதிர்வரும் ஆடி மாதம் 23ஆம் திகதி இடம்பெறும். (இ-30)